
# வரவு செலவும் குடிமகனும்



ට්‍රාන්ස්පේරන්සි
ඉන්ටනැෂනල්
ශ්‍රී ලංකා
සුපිළිපන් දේශයක් උදෙසා

முதல் பதிப்பு - 2014
ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீலங்கா
இலக்கம் 183/5 ஹைலெவல் ரோட், கொழும்பு – 06.
தொலைபேசி - (94) 114369781
தொலைநகல்: (94)1125114588
இணையத்தள முகவரி - **www.tisrilanka.org**

**ISBN: 978- 955-1281-53-3**

**வடிவமைப்புக் குழு**
எஸ்.ரனுக்கே
ரீ.கலைமகள்
ஆனந்த தர்மப்பிரிய ஜயசேகர

**ஆலோசக வளவாளர்**
எம்.டீ.ஏ.ஹெரல்ட் (முன்னாள் பிரதி கணக்காளர்)

**தொகுப்பு - தனுக்ஷி சேனாநாயக்க**
தமிழாக்கம்

**அட்டை வடிவமைப்பும் உள்ளக ஓவியங்களும்**
வைத்தியர் ஸ்ரீநாத் தேநுவரகமகே

**தொகுப்பு உதவி**
திம்பிரியாகம பண்டார

**பக்க வடிமைப்பு**
ஹரித தஹநாயக்க

இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உபயோகப்படுத்தும் போதும், வெளியிடும் போதும் அதற்கான பூர்வாங்க எழுத்துமூல அனுமதியினை ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். ஜனநாயகத்திற்கான நிதியத்தின் (NED) நிதி உதவியில் அச்சிடப்பட்டது.

# வரவு செலவும் குடிமகனும்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 01 |
| அறிமுகம் | 03 |
| வரவுசெலவு என்றால் என்ன? | 05 |
| வரவுசெலவு வட்டம் | 06 |
| வரவு செலவுத் திட்ட தயாரிப்பு | 09 |
| வரவு செலவு அறிக்கை தயாரிப்பின் போது மக்கள் பங்களிப்பை பெறுதல் | 10 |
| வரவு செலவு மக்கள் சார்பானதாக அமைய ணே்டுமானால் | 12 |
| வரவு செலவு அறிக்கையின் முக்கிய அம்சங்கள் | 13 |
| அரசு எம்மிடமிருந்து எதனால் வரி அறவிடுகின்றது? | 15 |
| வரியினைப் பற்றி நீங்கள் அறிவீர்களா? | 15 |
| வரவு செலவு அறிக்கைக்கான அனுமதியினைப் பெறுதல். | 17 |
| வரவு செலவு அனுமதிபெறும் விதம். | 19 |
| அரச நிதி தொடர்பில் பாராளுமன்றத்தின் அதிகாரம் | 19 |
| மீண்டும் வரும் செலவினமும், மூலதனச் செலவினமும் | 20 |
| வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின் செயற்படும் விதம். | 22 |
| வரவு செலவு செயற்பட்டின்போது எமது பங்களிப்பு | 23 |
| வரவு செலவு திட்டம் செயற்படும் போது இடம்பெறக்கூடிய முறைகேடுகளும், ஊழல்களும். | 25 |
| அரச நிறுவனங்களும் வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்துதலும் | 25 |
| அரச நிறுவனங்களின் கொள்வனவு செயற்பாடு | 27 |
| விலை விபரக் கோரலுக்கு முன்னதாக செய்ய வேண்டிய வேலைகள் | 29 |
| விலை விபரக் கோரல் | 31 |
| கொள்முதலின் கொள்முதலின் போது ஏற்படக்கூடிய ஊழல் மற்றும் முறைகேடுகள் | 33 |
| வரவு செலவு செயற்பாடு தொடர்பிலான பின்னூட்டு பணிகள் எவ்வாறு இடம்பெறுகின்றன. | 35 |
| வரவு செலவு அறிக்கையினை ஆராயும் பிரதம கணக்காய்வாளர் | 36 |
| கணக்காய்வு கருத்து | 38 |
| கோப் மட்டும் கோபா குழுக்களின் பணிகள் | 40 |
| வரவு செலவு திட்டத்தின் போது எமது பொறுப்புகள் எவை | 43 |
| பங்கேற்பு வரவு செலவுத் திட்டம் | 46 |
| வரவு செலவுப் பற்றிய சட்டங்களும் சுற்றறிக்கைகளும் | 50 |

# முன்னுரை

வரவு செலவு என்பது எல்லா குடிமக்களினதும் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட ஒரு செயலாகும். ஒரு தனி மனிதனின் வரவை விட செலவு அதிகமாக இருப்பின் அது அம் மனிதனின் வாழ்க்கைக்கு சவாலாக அமையும். இந்த அர்த்தத்தில் பார்க்கும்போது அம் மனிதனின் குடும்பத்திற்கும், நாட்டிற்கும் வரவு செலவு என்பது மிகுந்த் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது தெரிய வருகின்றது. ஓர் நாட்டின் வரவு செலவு கொள்கையினைத் தீர்மானிக்கும் அதிகாரம் நாடாளும் தனிமனிதரிடமிருந்து, நாட்டு மக்கள் வெறும் பார்வையாளர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டால், அதன் தீய விளைவுகளை நாட்டு மக்களே சுமக்க வேண்டி நேரிடும்.

இற்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன், பாராளுமன்றத்தில் வரவு செலவு திட்டத்தினை சமர்ப்பிற்கும் விடயம் நாட்டு மக்களின் அதிக கவனத்தை ஈர்த்த ஒரு விடயமாகவே இருந்து வந்தது. அதற்கான காரணம் பொருட்களின் விலைகளில் ஏற்படுகின்ற ஏற்றத் தாழ்வுகள் பற்றி அறிந்து கொள்ள அது முக்கிய சந்தர்ப்பமாக அமைந்தமையே ஆகும். தவிர நாட்டின் பொருளாதார கொள்கைகள் பற்றிய விடயங்கள் பொதுமக்களுக்கு அவ்வளவு நெருங்கியதாக அமைந்திருக்கவில்லை. ஆயினும் பொருட்களின் விலைகள் கூடுவதும் குறைவதும் வருடாந்த வரவு செலவு அறிக்கையினை வெளியிடுவதற்கு புறம்பான விடயமாக மாறியதால் காலப் போக்கில், இந் நாட்டின் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பில் மக்களிடமிருந்து வந்த ஆர்வமும் படிப்படியாக குறைந்து போய்விட்டது. இது சந்தோசப்படக்கூடிய ஒரு விடயமல்ல. அராசங்கத்திற்கு வரி செலுத்தும் குடிமக்கள் என்ற வகையில், நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை பற்றி அறிந்து கொள்ளும் உரிமையும், கொள்கைத் திட்டமிடலில் பங்குபற்றும் உரிமையும் அவர்களுக்கு இருக்கின்றது. அவ் உரிமையானது நாட்டின் அரசியல் அமைப்பு மூலமாகவும், பல்வேறு உடன்பாடுகள் மூலமாகவும் பெற்றக்கொடுக்கப்பட்டிருக்கும் உரிமையாகும். ஆயினும் இந் நாட்டு மக்கள் தமது வாக்குகளால் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ததன் பின்னர், கொள்கை வகுத்தல் உள்ளிட்ட எல்லாவிதமான தீர்மானங்களையும் எடுக்கும் அதிகாரங்களை அப் பிரதிநிதிகளிடம் கொடுத்தவிட்டு, குடிமக்கள் வெறுமனே பார்வையாளர்களாக இருந்து வருகின்றனர். இந்நிலையில் இருந்து விடுபடும் ஆரம்பப்படியாக குடிமக்கள் தமது உரிமைகளைப் பற்றி நன்கு அறிந்து கொள்வது அவசியம்.

தமது வாழ்க்கை நிலை மீது நேரடித் தாக்கததை ஏற்படுத்தும் வரவு செலவுத் திட்டத்தை, உருவாக்கும் அதனை செயற்படுத்தும் பணியில் தமது பங்கேற்பு உரிமையின் தன்மையினை புரிந்து கொள்வதும் அதற்கு அமைய செயற்பட வேண்டியதும் எவராலும் மறுக்க முடியாத குடிமகனின் உரிமையாகும். ஒரு பார்வையாளர் என்ற் அந்தஸ்திலிருந்து, செயற்பாட்டு ரீதியிலான பங்கேற்பினை வழங்கக்கூடிய குடிமக்கள் வாழும் சமூகம் நல்லாட்சி மிக்கதாக அமையும். அப்படி இல்லாவிட்டால், ஊழலுக்கும், இலஞ்சத்திற்கும் வன்முறைக்கு அது வழிவகுக்கும்.

வரவு செலவு செயற்றிட்டத்தினை அடிப்படையாக கொண்டு உருவாக்கப்படும் 'வரவு செலவும் குடிமகனும்' என்ற இந் நூல், ஒரு நாட்டின் பொருளாதார கொள்கைத் திட்டமிடல் மற்றும் அதனை செயற்படுத்தும் பணியில், குடிமக்களின் பங்களிப்பு எவ்வாறானது என்பதைப் பற்றி எளிய முறையில் விளக்கப்படுத்தும் வழிகாட்டியாகும்.

"வரவு செலவை" அடிப்படையாகக்கொண்டு, அவ்விடயம் தொடர்பான நிறுவன அமைப்புகள் யாப்பு விதிமுறைகள், உடன்படிக்கைகள் பற்றிய விடயங்களை இந்நூலின் வெளிக்கொண்டுவர இதன் ஆசிரியர்கள் முயற்சி எடுத்துள்ளனர். இந்நூலின் பிரதம ஆலோசகராக பணியாற்றிய முன்னாள் பிரதி கணக்காய்வு தலைமை அலுவலர், எம்.டீ.ஏ.ஹெரல்ட் அவர்கள் இந் நூலினை உருவாக்க பெற்றுக்கொடுத்த பங்களிப்பு மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

வரவு செலவு செயற்பாட்டின் குடிமக்களது பங்களிப்பினை அர்த்தபுஷ்டியாக்குவதற்கு இந் நூல் உதவியாக அமையும் என்பதே எமது நம்பிக்கையாகும். இதனை உருவாக்க தமது பங்களிப்பினை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏஸ்.ரனுக்கே
நிறைவேற்றுப் பணிப்பாளர்

# அறிமுகம்

எமது அன்றாட உணவிற்குத் தேவையான அரிசி, தேங்காய், காய்கறிகள், சரக்குத்தூள் மற்றும் வீட்டு வாடகை, பஸ் கட்டணம், மின்சாரக் கட்டணம், மருந்து மாத்திரை, பிள்ளைகளின் மேலதிக வகுப்புக்களுக்கான கட்டணம் என்பனவற்றுக்காக எவ்வாறு எமது வரவைக்கொண்டு செலவைத் திட்டமிடுவது என்பதையும், அவற்றை எவ்வாறு சமாளிப்பது என்பதையும் நாம் அறிவோம். அதேபால் எமது கையிருப்பில் இருக்கும் பணம் கட்டுப்படியாகாதபோது, வட்டிக்கு வாங்குவதும், நம் வசம் இருக்கும் பெறுமதிமிக்க பொருள்களை அடகு வைத்து பணத்தைப் பெற்றுக்கொள்ள நேரிடுவதும் சகஜம்.

இவ்வாறு எமது 'வரவு' அல்லது வருமானம் மற்றும் 'செலவு' பற்றி எமக்கு அறிவும் அனுபவமும் இருக்கின்றது. மாதாந்தம் எமக்கு எந்த அளவு வருமானம் வருகின்றது. அதைக்கொண்டு எந்தெந்த தேவைக்காக, எவ்வளவு செலவு செய்வது என்பதைப் பற்றி அடிக்கடி நாம் சிந்திப்பதுடன் திட்டங்களையும் தீட்டுகின்றோம். கடனைப் பெற்றுக்கொள்ளும்போதும் வட்டி குறைவானதா? எளிதில் திருப்பிச் செலுத்த முடியுமா என்ற விடயங்களைக் கவனத்தில் கொண்டே செயற்படுகின்றோம். எமக்கு மிகுந்த பணக் கஷ்டங்கள் ஏற்படும் போதும் முக்கிய தேவைகள் ஏற்படும் போதும் மாத்திரமே நாம் நமது பொருட்களை அடகு வைக்கின்றோம். குடும்ப வரவு செலவு பற்றி எமக்கு நல்ல அனுபவம் இருக்கின்றது. குடும்ப வரவு செலவு பற்றிய தீர்மானங்களை குடும்பத் தலைவனாகிய கணவனோ அல்லது மனைவியோ எடுப்பர். அவ்வாறு அவர்கள் இரவரும் பணத்தை செலவிடும் விதத்தில் இருக்கின்ற குறைபாடுகளை குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் சுட்டிக்காட்டுவதுடன், தேவையான நேரத்தில் உதவிக்கரத்ததை நீட்டுவது வழக்கம்.

ஆனாலும் எமது குடும்ப வரவு செலவு மீது ஏற்படும் தாக்கம் நாம் செலவளிக்கும் விதத்தில் மாத்திரமேதான் தங்கி இருக்கின்றதா? வேறு விடயங்களும் எமது வரவு செலவு மீது தாக்கத்தினை ஏற்படுத்துகின்றனவா? இன்று நள்ளிரவிலிருந்து பாணின் விலை 20/= வினால் அதிகரிக்கின்றது, அல்லது பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்களின் விலை 10/= ரூபாவால் அதிகரிக்கின்றது என்ற விடயத்தை செய்தி அல்லது தொலைபேசியின் குறுஞ் செய்தி மூலம் அறிந்து கொள்ளும் நாம் மௌனமாக அந்த கட்டணத்தை செலுத்துகின்றோமே தவிர, இந்த விலை உயர்வுக்கான காரணம் என்ன? இந்த தீர்மானங்கள் யாரால் எடுக்கப்பட்டது என்பதைப் பற்றி விபரம் அறிய நாம் முயற்சிப்பதில்லை. அவ்வாறு அறிந்து கொண்டாலும் எம்மால் எதையும் செய்ய முடியாது என்ற எண்ணமே அதற்கு காரணமாகும்.


ஆனால் எமது பணத்தை எவ்வாறு நாம் செலவளிக்க வேண்டும் என்ற விடயம் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள், தீர்மானங்களைப் பற்றி அறிந்துகொள்ள எமக்கு உரிமை இல்லையா? எந்தவித எதிர்ப்புமின்றி நாம் பெற்றுக்கொள்ளும் சேவைகளுக்கான வரிப்பணம், நீர்க்கட்டணம், தொலைபேசி, மின்சார கட்டணம் போன்ற பல்வேறு சேவைகளுக்கான கட்டணங்களைச் செலுத்தி விடுகின்றோம். அதேபோன்று பொருட்கள் அல்லது சேவைகளின் பெறுமதிமீது சேர்க்கப்பட்ட வரியினையும் செலுத்துகின்றோம்.

நாம் செலுத்தும் பணம் பற்றிய தீர்மானங்களின்போது எமது தலையீட்டை எவ்வாறு ஏற்படுத்துவது? எம் அனைவராலும் அத்தலையீட்டை செய்ய முடியாததால்தான் எம்மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் தீர்மானங்கள் தொடர்பில் தலையிடுவதற்காக நாம் எமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்பி வைக்கின்றோம். நாம் செலுத்தும் வரிகள் மீதான தீர்மானங்களை எடுக்கும் பொறுப்பு இந்த பாராளுமன்ற பிரதிநிதிகளிடமே ஒப்படைக்கப்படுகின்றது.

நாம் ஏற்கனவே அறிந்திருப்பதற்கு அமைய வருடா வருடம் நவம்பர் மாதத்தில் எம்மிடமிருந்து அறவிடப்படும் பணத்தை செலவிடும் விதம் பற்றி பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுகின்றது. அதன் பின்னர் விலைகள் அதிகரிக்கப்படும் பொருள்கள் பற்றியும் சேவைகள் பற்றியும் அரசினால் கல்வி சுகாதாரம் ஆகிய துறைகளுக்காக செலவிடும் நிதி ஒதுக்கீடுகள் பற்றியும் எமக்கு அறிய கிடைத்த விபரங்களின்படி அரசு அந்தந்த் துறைகளுக்கு ஒதுக்கியதாக தெரிவித்த நிதியினை அந்த துறைகளுக்காக செலவிட்டதா இல்லையா என்ற விடயத்தை துல்லியமாக அறியக்கிடைப்பதில்லை.

அந்த விடயங்களை அறியக்கூடிய வாய்ப்பு இருக்கின்றதா? அவ்விடயங்களை அலசி ஆராய்ந்துப் பார்ப்பதற்கு எமக்கு எவ்வாறான உரிமை இருக்கின்றது? அப்படியானால் அந்த விபரங்களை நாம் எங்கிருந்துப் பெறுவது? தனிமனிதர்கள் என்ற வகையிலும் ஒன்றிணைந்த சமூகமாகவும் அவ் விடயங்கள் தொடர்பில் எம்மால் எதைச் செய்ய முடியும்? இந்த நூலினை உருவாக்கும் போது நாட்டின் வரவு செலவு திட்டங்கள் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதையும், தற்போதைய வரவு செலவு செயற்பாட்டில் காணப்படுகின்ற குறைபாடுகளையும் பிரச்சினைகளையும் இனங்காணுவதற்கு மக்களுக்கு வழிகாட்டுவதுமே எமது முக்கிய குறிக்கோளாக இருந்தது.

தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் வரவு செலவு செயற்பாடு மீது மக்கள் கண்காணிப்பினை ஏற்படுத்துதல், இத் துறை பற்றி பெற்றுக்கொள்ளும் அறிவை உபயோகப்படுத்தி ஊடகம், சிவில் சமூக அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் இந் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிய கண்காணிப்பு மற்றும் கணக்காய்வு ஆகிய விடயங்களைப் பற்றி ஆர்வம் கொண்ட அவ் உரிமைகளை உபயோகப்படுத்தி இவ் விடயங்களில் தலையீடு செய்யும், விழிப்புணர்வு மிக்கவர்களாக செயற்பட வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.




# வரவு செலவு என்றால் என்ன?

# வரவு செலவு என்றால் என்ன?

ஏனைய நாடுகளைப் போன்றே இலங்கையிலும் மத்திய அரசு, மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக அமைப்புக்கள், அரச நிர்வாகம் மற்றும் அரசை முன்னெடுத்தல் ஆகியவற்றின் பொறுப்பை ஏற்கின்றது. அதற்கமைய மத்திய அரசு, அரச பாதுகாப்பு, சட்டம் மற்றும் நீதி ஆகியவற்றை உறுதிப்படுத்தும் பொறுப்பை சுமக்கின்றது. மாகாண நிர்வாகத்தின் பொறுப்புகளாக குறிப்பிட்ட பிரதேசத்தின் அபிவிருததி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல், மற்றும் மக்கள் சேவைகளை முன்னெடுத்தல் ஆகியன அமைகின்றன. அதற்காக அந் நிறுவனங்களுக்கு நிதி மற்றும் தேவையான ஏனைய வசதிகள் மத்திய அரசினால் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. மத்திய அரசு இவ் அனைத்து தேவைகளுக்கும் வரவு செலவு மூலமே நிதியினைப் பெற்றுக்கொடுக்கின்றது.

அரசாங்கம், அரச நிர்வாகத்திற்காக நிதியினை பெற்றுக்கொள்ளும் விதத்தையும், குறிப்பிட்ட செயல் எல்லைக்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறித்த நிதியினை பல்வேறு அம்சங்களுக்காக செலவிட எண்ணும் விதத்தினையும் வரவு செலவுத் திட்டம் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. அதன்படி வரவு செலவு அறிக்கை என்பது அரசாங்கத்தின் குறிக்கோள் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் கண்ணாடி என்று கூறலாம். அத்தோடு அவ் வரவு செலவு அறிக்கையினை நன்றாக ஆராய்ந்து அரசாங்கம் எந்த அளவிற்கு அந்த அறிக்கைக்கு அமைய செயற்படுகின்றது என்பதை கண்காணிக்க வேண்டிய பொறுப்பு பொது மக்கள் மீதும் சிவில் சமூகத்தின் மீதும் சுமத்தப்படுகின்றது. அதன் மூலம் நிர்வாகத்தின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகிய தன்மைகளை ஏற்படுத்த மக்கள் பங்களிப்பினை பெற்றுக்கொடுப்பதற்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

அரசாங்கத்தின் வரவு செலவு திட்டம் மக்கள் மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு அம்சமாகும். அத்தோடு பொது மக்களும் அதிலொரு பங்குதாரியாகின்றனர். ஆயினும் அந்த மக்களுக்கு அரச வரவு செலவு திட்டம் எவ்வாறு உருவாக்கப்படுகின்றது என்பதை அறிந்து கொள்வதற்கும் வரவு செலவு உருவாக்கல் பணியில் பங்குகொள்வதற்கும் வசதிகளும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டிருகின்றனவா? வரவுசெலவுத் திட்ட உருவாக்க்களின் போது அதில் மக்கள் பங்களிப்பு எந்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது? அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு, பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப்படும் வரவு செலவுத் திட்டத்தினை கண்காணிக்க வேண்டியது பொது மக்களின் செயற்பாட்டின் ஒரு அங்கமா?

## வரவு செலவு வட்டம்

அரசங்கத்தின் வரவு செலவு அறிக்கை என்பது திட்டமிடப்பட்ட செலவு மற்றும் எதிர்பார்க்கப்படும் வரவு ஆகியவற்றை ஒரு அரசு எவ்வாறு கையாளுகின்றது என்பதை வெளிப்படுத்தும் கொள்கை ரீதியான ஆவணமாகும். இவ் அறிக்கையினைத் தயாரிக்கும் பணியானது பல்வேறு செயற்பாடுகள் ஊடாகவே

இடம்பெறுகின்றது. அரச நிறுவனங்கள், மாகாண நிர்வாக அமைப்புக்கள் ஆகியன பல்வேறு வகையில் இதில் பங்களிப்புச் செய்கின்றன. தத்தமது நிறுவனங்கள் மட்டத்தில் மாதாந்த வரவு செலவு அறிக்கைகளைத் தயாரித்தல், எதிர்வரும் வருடத்திற்கான செயற்றிட்டத்தினை வடிவமைத்தல் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கான செயற்றிட்டங்ளை உருவாக்குதல் ஆகியன இச் செயற்பாடுகளுக்கு சில உதாரணங்களாகும். இவ்வாறான செயல்களில் பங்கேற்பின் மூலமே இந் நிறுவனங்கள் வரவு செலவு வட்டத்தின் பல்வேறு நிலைகளில் தமது பங்களிப்பினை வழங்குகின்றன.

## வரவு செலவு வட்டம்

### 1 வரவு செலவுத் திட்டத்தை தயாரித்தல்

வரவு செலவுக்கான அடிப்படையாக அமையும் பொருளாதாரத் திட்டம் மற்றும் கொள்கை (Fiscal Managment Report)

### 2 வரவு செலவிற்கான பாராளுமன்ற அனுமதியினைப் பெறுதல்

ஒதுக்கீட்டுச்சட்டமூல (Appropriation Bill)
வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்தப்படும் போது பயன்படுத்தப்படுகின்ற அறிக்கைகள்.


### 3 வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்தல்

மத்திய வங்கியினால் மாதா மாதம் வெளியிடப்படுகின்ற அரச செலவினம் உள்ளிட்ட பொருளாதார தகவல் வெளியீடுகள் இணையத்தளங்களிலும் வெளிவருகின்றன.
நிதி அமைச்சினால் வெளியிடப்படுகின்ற அரையாண்டு அறிக்கைகள் (Mid year reports) 2002இ 03ஆம் இலக்க நிதி முகாமைத்துவ பொறுப்புச் சட்டத்திற்கு அமைய, அரசாங்கம் இவ் அறிக்கைகளை வெளியிட கடமைப்பட்டுள்ளது. இவ் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் மக்களுக்குப் பெற்றுக்கொள்வதற்கும் வசதி செய்தல் வேண்டும்.

### 4 வரவு செலவு மேற்பார்வை

வருடத்திற்குள் வெளியிடுகின்ற அறிக்கைகள்

(In year reports)
இவ் அறிக்கைகள் அரையாண்டுக்கு ஒரு முறை வெளியிடப்படுகின்றன.
கணக்காய்வாளர் அறிக்கை




# வரவு செலவு அறிக்கை தயாரித்தல்

# வரவு செலவு அறிக்கை தயாரித்தல்

வரவு செலவு அறிக்கையினை தயாரிக்கும் பொறுப்பு அரச தலைமையினுடையதாகும். இப் பணியின் தொடர்பாடல்களை நிதி அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்றது. இதன்போது நிதி அமைச்சு அமைச்சர்கள், கூட்டுத்தாபனங்கள். சபைகள் ஆகியவற்றிடமிருந்து தனித்தனியாக விபரங்களை பெற்றுக்கொண்டு அரசாங்கத்தின் முதன்மை வருமானத்துடன் உத்தேசச் செலவினத்தை ஒப்பு நோக்கப்படும்.

அதேபோல், நிதி அமைச்சு நேரடியாகவும், வர்த்தக சபைகள் மற்றும் (சுகாதாரம், கல்வி) போன்ற பிரிவுகளிடமிருந்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும். ஆத்தோடு வரவு செலவுப் பற்றிய பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுத் தருமாறு கோரி பத்திரிகைகளில் விளம்பரம் செய்யும்.

## வரவு செலவுத் திட்டத் தயாரிப்பின் போது மக்களின் பங்களிப்பைப் பெறுதல்

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய சர்வதேச நிறுவனம் (OECD) தெரிவிக்கும் கருத்தின்படி, மாதிரி வரவு செலவு அறிக்கையை உண்மையான வரவு செலவுத் திட்ட யோசனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக வெளியிடப்பட வேண்டும்.

- அதேபோன்று ஒதுக்கீட்டு சட்டமூலத்தை குறிப்பிட்ட வரவு செலவு வருடம் ஆரம்பமாவதற்கு குறைந்தபட்சம் மூன்ற மாதங்களுக்கு முன்பாவது பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பொது மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் அவர்களது கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பு கிடைக்கும்.

- அரச நிறுவனங்களின் செயற்றிட்டங்களை (யுஉவழைெ ீடயெ) பொதுமக்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

- வரவு செலவு பற்றிய மாதாந்த அறிக்கையினை மக்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

- உதாரணமாக : - பாடசாலைக் கட்டடத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டிருப்பினும் அப் பணி நிறைவேற்றப்படவில்லை என்றால் அவ் விடயம் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்த இதன்மூலம் மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

வரவு செலவு வட்டம் என்றால் என்ன? அதனுள் அடங்கும் விடயங்கள், அவ் விடயங்களுக்கு மக்கள் பங்களிப்பை பெற்றுக்கொடுப்பது எவ்வாறு? ஏன்ற விடயங்கள் பற்றி மக்களுக்கு அறிவூட்டப்பட வேண்டும்.

- தற்போது இந்நாட்டின் சகல அபிவிருத்தித் திட்டங்களும் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டம் மற்றும் மஹிந்த சிந்தனை முன் நோக்கு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே செயற்படுத்தப்பட்டு வருகின்றது. ஆனால் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தைப் பற்றியோ அல்லது மஹிந்த சிந்தனை முன் நோக்கு திட்டத்தினால் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறைகளில் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் அடைய வேண்டிய இலக்குகள் பற்றியோ பொதுமக்கள் தேவையான அளவிற்கு அறிந்திருக்கின்றார்களா. மஹிந்த சிந்தனை வெளியீடுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே இடம் அரச வெளியீட்டுத் திணைக்களம் என்ற விடயத்தை எத்தனை பேர் தெரிந்து வைத்திருக்கின்றார்கள்.

- மக்கள் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் உரிய முறையில் செயற்பட வேண்டுமாயின், கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற அனைத்து அம்சங்கள் பற்றியும் பொதுமக்கள் போதுமான அளவு அறிவைப் பெறக்கூடிய பயன்மிக்க வேலைத் திட்டம் ஒன்று இருத்தல் வேண்டும்.

- இருக்கின்ற வளங்களுக்குள் மக்கள் தேவைகளை முதன்மைப்படுத்தப்பட்டு, தேசியக் கொள்கை அல்லது அபிவிருத்தித் திட்டங்களுக்குள் அவை எவ்வாறு உள்வாங்கப்படுகின்றன என்ற விடயத்தையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

வரவு செலவு அறிக்கையினை தயாரிப்பதற்கு சில வாரங்கள் அல்லது சில மாதங்கள் செல்லக்கூடும். அதன்பின் நிதித்துறை நிபுணர்கள், கொள்கை தயாரிப்பாளர்கள் போன்ற பல்துறை நிபுணர்களின் பங்கேற்பில் வரவு செலவு அறிக்கை பற்றிய தொழில்நுட்ப திட்டமொன்று முன்வைக்கப்படும். இவ்வாறு முன் வைக்கப்படுகின்ற தொழில்நுட்ப திட்டம் எனும் வரவு செலவு திட்டம் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதுடன், அதன்போது பொது ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கும் அதுபற்றி அறியும் வாய்ப்பு கிடைக்கப்பெறுகின்றது.

ஆயினும் இந்த தொழில்நுட்பத் திட்டம் பற்றி எந்தவிதத்திலும் சாதாரண பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்படுவதோ, அல்லது சாதாரண பொது மக்களுக்கு தெளிவுபடும் வகையில் அத் திட்டத்தினை எளிதான முறையில் எடுத்துக்கூறப்படுவதோ இல்லை.

சில நாடுகளில் பொதுளமக்கள் புரிந்துகொள்ளக்கூடிய எளிய முறையில் வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்படுகின்றன. அதை “குடிமக்கள் வரவு செலவு” (Citizens Budget) என்று அழைக்கப்படுகின்றது. இது வரவு செலவு செயற்பாட்டில் கட்டாயம் இடம்பெற ணேடிய ஒரு அத்தியாயமாகுமென பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய நிறுவனம் (OECD) இனங்கண்டுள்ளது.

## வரவு செலவுத் திட்டம் மக்கள் சார்பானதாக வேண்டுமாயின்,

வரவு செலவின் ஒவ்வொரு தலைப்பும் மிக எளிய முறையில் மக்கள் வரவு செலவு மூலம் தெளிவாக முன்வைத்தல் வேண்டும். உதாரணமாக கல்விக்கான அரசாங்க நிதி ஒதுக்கீடு 06 மில்லியன் ரூபாவாக இருப்பின், அது மாகாண ரீதியில் எந்தெந்த அளவில் பங்கிடப்படுகின்றது? ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கென எந்த அளவு நிதி ஒதுக்கப்படுகின்றது. எத்தனை மாவட்டங்களில் எத்தனை பாடசாலைகளில், எத்தனை விஞ்ஞான ஆய்வுகூடங்கள் நிர்மாணிப்பதற்காக எந்த அளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றது.? போன்ற விடயங்களுக்கு திட்டவட்டமான விடை சுலபமான முறையில் பெறக்கூடிய வகையில் குடிமக்கள் வரவு செலவு திட்டத்தை மக்கள் முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதன்போது, மக்கள் பிரதிநிதிகள் நிறைவேற்றவேண்டிய பொறுப்புகளாக கீழ் காணும் விடயங்களை கூறலாம்.

- தமது பிரதேசத்தின் மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் வரவ செலவு பற்றிய அறிவு ஆகியவற்றை பெற்றுக்கொண்ட விதத்தை தெளிவுபடுத்துதல்.
- மக்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் ஆகியவற்றை தெரிவிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுத்தல்.
- தேவைகளை முதன்மைப்படுத்திய விதத்தை மக்களுக்கு தெளிவுபடுத்துதல்
- கைவசம் இருக்கின்ற வளங்கள் பற்றி மக்களுக்கு எடுத்துக் கூறுதல்
- அதற்கு அமைய எடுக்கப்பட்ட தீர்மானங்களை வெளியிடுதல்
- அத் தீர்மானங்களை வரவு செலவு தயாரிப்பின் போது உபயோகப்படுத்தப்பட்ட விதம் பற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்தல்.

### இந்தியாவில் மக்கள் வரவு செலவு திட்டத்திற்கான (Peoples Budget Initiative) ஆரம்பம் பற்றிய அனுபவம்*

இந்தியாவில் அரச வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் போது அதற்குள் பொதுமக்களது முக்கிய தேவைகளை இனங்கண்டு, தேசிய வரவு செலவுத் திட்டத் தயாரிப்பிற்கு முன்பாக முதன்மைத் தேவைகளை பட்டியலிடுவதற்கான தேசிய மளாநாட்டை நடத்த வேண்டும் என்பது அதன் முக்கிய பணியாகும். 2011ஆம் ஆண்டிலிருந்து தேசிய மாநாட்டிற்கு முன்னதாக பிராந்திய மாநாடுகள் நடத்தப்படுகின்றன. இதுவரை இவ் அமைப்பு 23 மாநிலங்களில் 400 சிவில் அமைப்புக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

* Charter of Demands for Union Budget 2013-14 (Peoples Budget Initiative)

இந்த மக்கள் வரவு செலவு சம்பந்தமான கலந்துரையாடலில் தீர்க்கமான அம்சங்களாக கல்வி, சுகாதாரம், நீர் கிராம அபிவிருத்தி, விவசாயம், உணவு பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றங்கள் ஆகியன பற்றி கவனம் செலுத்தப்படுகின்றன.

இக் கலந்துரையாடல்களில், சிறுவர், ஆண், பெண், தாழ்த்தப்பட்ட இனத்தவர்கள், ஆதிவாசிகள், முஸ்லிம் இனத்தவர்கள், அங்கவீனர்கள், முறையற்ற மற்றும் வீட்டுத் தொழில் ஆகியவற்றில் ஈடுபடுவோர் போன்றவர்கள் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருகின்றன.

அதேபோல், வரி வருமானம் பற்றியும் இங்கே கவனம் செலுத்தப்படுகின்றன. 2011ஆம் ஆண்டில் வருமான வரி சேகரிப்பு 2010ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற 157.3 மில்லியன் ரூபாவை விட 16 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், மொத்த தேசிய உற்பத்தியுடன ஒப்பிட்டு பார்க்கையில் கடந்த வருடததை போன்றே 2.4மூ வீதமாகவே இருக்கின்றன. 2011ஆம் ஆண்டில் சாதகமான பொருளாதார பின்னணிக்குள் வருமானங்களில் ஏற்பட்ட வளர்ச்சியினால், வருமான வரியிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது. வங்கி, நிதித்துறை, உணவு மற்றும் குடிவகைகள், புகையிலை ஆகியன அடங்கலாக.

## வரவு செலவு அறிக்கையில் உள்ளடக்கப்படும் முக்கிய விடயங்கள்

**உத்தேச வருமானம்**
உள்நாட்டு நிதி
வெளிநாட்டு கடன்
நிறுவனங்களிலிருந்து பெற்றுக்கொள்ளும் கடன்
வெளிநாட்டு நிதியம்

**உத்தேச செலவினம்**
மீண்டு வரும் செலவினம்
மூலதனச் செலவினம்

**வரவு செலவு துண்டு விழும் தொகை**
வரவு செலவு அறிக்கையில் குறிப்பாக, குறிப்பிட்ட ஆண்டிற்கான அரசாங்கத்தின் உத்தேச வருமானமும் செலவினமுமே உள்ளடங்குகின்றன.

## அரசுக்கு அந்த வருமானம் எவ்வாறு கிடைக்கின்றது?

வருமானம், மானியம் மற்றும் கடன் – (Revenue, Grants and Taxes)

**வருமானம்**

↓

வரிவருமானம்

↓

| நேரடி | மறைமுக |
|---|---|
| உதாரணம் வருமானவரி (INCOME TAX) | உதாரணம் சேர்க்கப்பட்ட (VAT) |

- அரசாங்கத்தினால் சேகரித்துக் கொள்ளப்படும் கட்டாய வரிப்பணம்

- சமூக பாதுகாப்பு கட்டணம்

**மானிய (நிதியம்)**

↓

வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்கள் மீளப்பெறாத வகையில் பெற்றுக்கொடுக்கும் நிதி உதவி, அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்காக வழங்கும் புலமை பரிசில்கள் அல்லது சேவைகள்

உதாரணம்:-
தேசிய கல்வி நிறுவனம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை ஆகியவற்றை மஹரகமையில்ஸ்தாபித்து பராமரித்தல் ஜப்பான் அரசு மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமைஇலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தை ஸ்தாபித்தல், ஊழியர் பயிற்றுவிப்பு ஆகியவைஜப்பான் அரசினால் மேற்கொள்ளப்பட்டமை (இவ்வாறான வெளிநாட்டு நிதியத்தை பெற நாட்டின் வெளிநாட்டுக் கொள்கை மற்றும் நல்லாட்சி ஆகிய விடயங்களின் செயற்பாடு கவனத்தில் கொள்ளப்படும்.)

**கடன்**

↙ ↘

| உள்நாட்டு நிதிநிறு-வனங்கள் | வெளிநாட்டு நிதிநிறு-வனங்கள் |
|---|---|

↓

| குறுகிய கால | நீண்டகால |
|---|---|

ஆசிய அபிவிருத்தி வங்கி
உலக வங்கி

இக்கடன் சுமையினைக் குறைக்க அரசு மீண்டும் கடனைப் பெறுகின்றது.

## அரசின் நிதி ஆண்டிற்கான உத்தேச செலவு பற்றி நீங்கள் அறிவீர்களா?

அரச வரவு செலவு அறிக்கையில் 2 வகையான செவுகள் வருகின்றன. மீண்டு வரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம்.

## ‘அரசாங்கம் எதனால் எம்மிடமிருந்து வரிகளை அறவிடுகின்றது?

- அரசாங்க வருமானத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் கட்டாய மக்கள் சேவைகளை சிறந்த முறையிலும் இடைவிடாதும் முன்னெடுத்துச் செல்வதற்காக.
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், சட்டம் ற்றும் இயல்பு நிலை ஆகியவற்றை பாதுகாப்பதற்காக.
- வருமானம் மற்றும் நிதி ஆகியவற்றை மீண்டும் பகிர்ந்தளிப்பதற்காக.
- பொருளாதார ஒழுங்குப்படுத்தலுக்காக.
- பாரிய அளவிலான பொருளாதார ஸ்தீரத்தனமையினை ஏற்படுத்துவதற்காக.
- விசேட பொருளாதார இலக்குகளை அடைதல் ஆகியவற்றுக்காகவே அரசு வரி அறவிடுகின்றது.

## வரி பற்றி நீங்கள் அறிவீர்களா?

நேரடி வரி மறைமுக வரி என 2 வகையான வரி முறைகள் இருக்கின்றன.

## நேரடி வரி

சொத்து மற்றும் வருமானம் ஆகியவற்றுக்காக அரசாங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய வரி
இவ் வரி அறிவிடலின் போது வரிச்சுமை வரியை செலுத்துபவர் மீதே சுமத்தப்படுகின்றது. இவ் வரியிலிருந்த விடுபட முடியாது.

## நேரடி வரியாக செலுத்த நேரிடும் வரிகள் எவை?

வருமான வரி, வரிப்பணம் (சொத்துக்கள் மீது செலுத்தப்பட வேண்டியவை)

வருமானவரியான செலுத்தாது விடுவதால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் கணிசமான அளவு வருமானம் கிடைக்காமல் போகின்றமை பாரிய பிரச்சினையாகி இருப்பதாக அரச தரப்பினர் குறைகூறுகின்றனர். அதாவது அதிக வருமானத்தை பெரும் சிலர் அரச மற்றும் சமூக அதிகாரத்தை பயன்படுத்தி சட்ட ரீதியான தடைகளைத் தாண்டி வருமானவரியை செலுத்தாது விடுகின்றனர்.

## மறைமுக வரி

மறைமுக வரி பொருள்கள் மற்றும் சேவைகளைப் பெரும்போதே அறவிடப்படுகின்றன. இறக்குமதி வரி போன்ற வரிகளைப் பற்றி எமக்கு அறிய கிடைப்பதில்லை.

## செலுத்த நேரிடுகின்ற சில மறைமுக வரிகள்

■ சேர்க்கப்பட்ட பெறுமதி மீதான வரி மற்றும் இறக்குமதி வரி

ஒரு அரசு மறைமுக வரி மீது நம்பிக்கை வைத்து செயற்படுவதன் அர்த்தம் பொருளாதார இஸ்திரத்தன்மையே ஆகும். மறுபுறத்தில் வரி முறயினால் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசிகள் கூட அதிகரித்து பொதுமக்கள் கடும் க்'டத்திற்கு ஆளாக்கப்படும் நிலைமை ஏற்படும். கொத்தமல்லி, கிழங்கு, வெங்காயம், பருப்பு, மாசி, மிளகாய் மற்றும் சினி ஆகிய உணவுப் பொருட்களின் விலை வரி அறவிடப்படுவதால் அதிகரிப்பது வறுமையின் து்'ட சக்கரம் மேலும் பலம் அடைவதற்கு காரணமாக அமையும். அதாவது பணவசதி படைத்தவர்களின் உணவிற்கு விலை உயர்வால் பாதகம் ஏற்படாவிட்டாலும் வறியோரின் உணவு விலைவாசி அதிகரிப்பால் தடைப்படும்.


## எம்மிடமிருந்து வரி அறவிடக்கூடிய அதிகாரம் அரசினால் எவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது?

## அது எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது?

வரி அறவிடுவதற்கான அனுமதியை பாராளுமன்றமே வழங்க வேண்டும் என்பதை அரசியல் யாப்பின் 148ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. பாராளுமன்ற சட்டத்தினால் வழங்கப்படும் அதிகாரத்தின்படி அரசுக்கு எந்தவொரு வரியையும் அறவிட முடியாது. இதனால் வரி அறவிடும் அதிகாரத்தை அரசு பல்வேறு நிறுவனங்களிடம் ஒப்படைத்திருக்கின்றது. அந் நிறுவனங்கள் பாராளுமன்றச் சட்ட அதிகாரத்தின்படியே வரியை அறவிடுகின்றன. உதாரணமாக தேசிய வருமான ஆணையாளர் நாயகம் தேசிய வருமானச் சட்டத்தின் பிரகாரமும், சுங்க பணிப்பாளர் நாயகம், சுங்க சட்டதிட்டங்களுக்கு அமையவும், மது வரி ஆணையாளர் மதுவரி சட்டப் பிரகாரமும், பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் வரி வருமானத்தை சேகரிக்கின்றனர்ூ

## வரவு செவுத் திட்டத்தை உருவாக்க அடிப்படையாக அமையும் விடயங்கள்

ஒரு வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தினை தயாரிக்கும் போது அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையினை கவனத்தில் கொள்ளப்படும். ஆளும் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படும் போது ஆட்சியிலிருந்த அரசின் பொருளாதார கொள்கைக்கு பதிலாக, புதிய பொருளாதார கொள்கையினை அறிமுகப்படத்தி வைத்து அதற்கு அமைய தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கப்படும். அதேபோல், அரச செலவினம் என அதிக உத்தேச செலவினத்தை முன் வைப்பதையும் காணக்கூடியதாக இருக்கும். தற்போது வரவு செலவுத் திட்டத் தயாரிப்பை இலக்காக கொண்ட தேசிய அபிவிருத்தி திட்டங்களான “சுநபயயைைெபெ ளுசை டுயமெய” இலங்கையை மீண்டும் எழுச்சிபெற செய்தல் அல்லது ‘மஹிந்த சிந்தனை’ வேலைத் திட்டங்களை அடிப்படையாக கொண்டே உருவாக்கப்படுகின்றன.




# வரவு செலவு அறிக்கைக்கான அனுமதியைப் பெறுதல்

# வரவு செலவு அறிக்கைக்கான அனுமதியைப் பெறுதல்ர

வரவு செலவு வட்டத்தின் முக்கியமான ஒரு நகர்வாக அதற்கு நிறைவேற்றுத் துறையினதும் நாடாளுமன்றத்தினதும் அனுமதி பெற வேண்டியதனை சுற்றிக்காட்டலாம்.

இதன்போது எதிர்வரும் ஆண்டிற்கான அரசின் உத்தேச வரவு செலவு அறிக்கையினை நிதி அமைச்சர் பாராளுமன்றில் சமர்ப்பிப்பார். சிவில் சமூக செயற்பாட்டாளர்களினதும் பொது மக்களினதும் கவனம் இதன்போதே பெரும்பாலும் வரவு செலவு அறிக்கைப் பக்கம் திரும்புகின்றது. அத்தோடு ஊடகங்களும் இதன்போதே வரவு செலவுத் திட்டத்தின் உள்ளடக்கம் பற்றிய விரிவான தகவல்களை வெளியிடுகின்றன. ஆயினும் பொருளாதார நிபுணர்களும் கொள்கை திட்டமிடல் நிபுணர்களும் கல்விமான்களும் இணைந்து தயாரிக்கும் வரவு செலவு அறிக்கையானது தொழில்நுட்ப திட்டமொன்று என்பதால் அதில் உள் வாங்கப்பட்டுள்ள விடயங்களை சாதாரண பொது மக்களுக்கு எளிமையாக, தெளிவாக விளங்கிக்கொள்ளக்கூடிய விதத்தில் தெளிவுபடுத்துதல் கட்டாயத் தேவையாகும். அத்துடன் வரவு செலவுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் முறை பற்றி பொது மக்களுக்கு தகுந்த முறையில் அறிவூட்டப்படுவதும் அவசியமாகும்.

## வரவு செலவு திட்டம் நிறைவேற்றப்படும் விதம்

அரசியலாப்பின் XVII அத்தியாயத்தின்படி. அரச நிதி பற்றிய முழு நிர்வாகமும் பாராளுமன்றத்திற்கே உரியதாகும். இதற்கமைய, நிறைவேற்றுத்துறையின் தலைமையில் நிதி அமைச்சின் ஒருங்கிணைப்பில், உருவாக்கப்படும் வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட வேண்டும்.

வருமானத்தை ஒன்றுதிரட்டும் பணி சட்டப்பிரகாரம் செயற்படத்த வேண்டுமென அரசியல்யாப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், வரி அறவிடுவதை பாராளுமன்ற சட்ட அதிகாரங்களுக்கு ஏற்ப செயற்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக, வருமானத்தை திரட்டும் அதிகாரம் தேசிய வருமான வரி சட்டத்தின் கீழ் தேசிய வருமான திணைக்களத்தின் செயலாளர் நாயகத்திற்கே வழங்கப்பட்டிருக்கின்றது.

## அரச நிதி தொடர்பில் பாராளுமன்றத்திற்கு உரிய அதிகாரங்கள்

- அரசிடம் ஒன்றிணைக்கப்பட்ட நிதியமொன்று இருக்கின்றது. அந் நிதியிலிருந்து நிதியினைப் பெற்றுக்கொள்ளும் பணியை பாராளுமன்ற அதிகாரத்தின் கீழ் நிதி அமைச்சரினால் மேற்கொள்ளப்படும்.
- மாகாண சபைகளுக்கான நிதி ஒதுக்கீடு
- பாராளுமன்ற நிலையியக் குழு மூலம் குறிப்பிட்ட நிதியினை, உரிய சட்ட திட்டங்களுக்கு அமைய செலவிடப்பட்டிருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்த்தல்.
- வரவு செலவுத் திட்ட நிறைவேற்றலுக்குரிய ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினை அங்கீகரித்தல்

பாராளுமன்றத்தினால் வரவு செலவுத் திட்டத்தினை அங்கீகரிப்பதன் மூலம் அரச செலவுகளுக்கான சட்டபூர்வ அங்கீகாரம் கிடைக்கப்பெறுகின்றது. வரவு செலவுத் திட்டத்தின் அரச செலவுக்கு பொறுப்பு கூற நிதி அமைச்சர் கடமைப்பட்டுள்ளார்.

## ஒதுக்கீட்டுச் சட்டமூலம் என்றால் என்ன?

குறிப்பிட்ட ஒரு வருடத்திற்கான அரசாங்கத்தின் அனைத்து செலவுகளையும் ஏற்பதற்காக பாராளுமன்றத்தினால் அங்கீகாரம் வழங்கப்படுகின்ற சட்டமூலமே ஒதுக்கீட்டுச் சட்டமூலமென அழைக்கப்படுகின்றது.

இச் சட்ட மூலம் ஒவ்வொரு அமைச்சுக்கும், திணைக்களத்திற்கும் ஒதுக்கப்பட்ட மீண்டு வரும் செலவு மற்றும் மூலதனச் செலவு பற்றிய விபரங்கள் உப ஆவணத்தினால் உள்வாங்கப்படுகின்றது. அத்துடன் ஒவ்வொரு அமைச்சுக்கும், திணைக்களத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள மீண்டுவரும் செலவு மற்றும் மூலதனச் செலவுகள் பற்றிய உப ஆவணங்களும் இணைக்கப்படும்.

## ஒவ்வொரு வருடத்திற்குமான ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தின் பிரதியினை பெறுவது எவ்வாறு?

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் பிரதியினை அதற்கான கட்டணத்தை செலுத்தி அரச வெளியீட்டுத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.




## மீண்டும் வரும் செலவு என்றால் என்ன?

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சேவைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்கான செலவினத்தையே மீண்டுவரும் செலவு என குறிப்பிடப்படுகின்றது.

மீண்டுவரும் செலவுக்குள் அடங்கும் செலவுகள் எவை?

- ஊழியர்களின் சம்பளம்
- போக்குவரத்துச் செலவு மற்றும் தொலைபேசி கட்டணச் செலவு
- நீர் மற்றும் மின்சாரக் கட்டணம்
- கட்டடப் பராமரிப்பு ஆகியன.

## மூலதனச் செலவு என்றால் என்ன?

புதிதான அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தல், ஏற்கனவே செயலில் இருக்கின்ற திட்டங்களில் புதிய பிரிவு ஒன்றை இணைத்தல் போன்றவற்றுக்கான செலவுகளே மூலதனச் செலவாகும். நிதர்சனமாக கல்வி அமைச்சினால் மஹிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஆரம்பிப்பதற்கான மதிப்பீட்டுச் செலவைக் கூறலாம். விவாதத்தின் பின் நிதி அமைச்சர் அதுவரை எழுப்பப்பட்ட வினாக்களுக்கும் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கும் தமது பதிலை அளிப்பார். அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரவு செலவு அறிக்கை மற்றும் அதன் கொள்கைகள் மீதான வாக்கினை அளிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

## ஒரு வரவு செலவுத் திட்டத்தினை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிப்பதற்கான குறிப்பிட்ட கால எல்லை இருக்கின்றதா?

புதிய நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 02 மாதங்களுக்கு முன்பாக நிதியமைச்சரினால் வரவு செலவுத் திட்டத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

## ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்கச் செய்தித்தாளில் (வர்த்தமானியில்) வெளியிடுவதின் நோக்கம்

- ஒவ்வொரு நிதி ஆண்டிற்குமான வரவு செலவு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தினையும் நிதி அமைச்சரினால் பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கக்கூடிய வகையில் முன்கூட்டியே வர்த்தமானி அறிவித்தலாக அச்சிடப்பட்டு வெளியிட வேண்டும்.

- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினை அரசாங்கச் செய்தித்தாளில் வெளியிடுவதின் நோக்கம், அரசாங்க செலவினம்ங்களைப்பற்றி பொதுமக்கள் அறிந்துகொள்ள வாய்ப்பளிப்பதேயாகும். அத்தோடு பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெறுகின்றபோது. மக்கள் பிரதிநிதிகள் மூலமாக தமது யோசனைகளை தெரிவிப்பதற்கான வாய்ப்பினை மக்களுக்கு பெற்றுக்கொடுப்பது இதன் இன்னுமொரு நோக்கமாகும்.

## வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்திற்கு கிடைக்கப்பெற்றதன் பின்.

- வரவு செலவுத் திட்ட அறிக்கை பாராளுமன்றத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் அதை பாராளுமன்றத்திற்கு சொந்தமான ஒரு ஆவணமாகவே கருதப்படும்.

- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் இரண்டாம் முறை வாசிப்பின்போது நிதி அமைச்சரின் உரை நிகழ்த்தப்பட்டதன் பின்னர், வரவு செலவு மீதான விவாதத்தினை நடத்தி அதன் மீதான வாக்கெடுப்பினை நடத்தியப் பின் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்படும்.

## வரவு செலவுத்திட்டத்தினை உருவாக்கப்படும் பணியின்போது மக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு எவ்வாற அமைய வேண்டும்?


- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் உள்ளடக்கம் பற்றி பொது மக்களுக்குத் தெளிவுபடுத்தி அவர்களுக்க அது பற்றிய அறிவைப் பெற்றுக்கொடுத்தல்.

- வரவு செலவுடன் சம்பந்தப்பட்ட சமூக மற்றும் பொரளாதார கொள்கைகளைப் பற்றி மக்களுக்கும், ஊடகங்களுக்கும், கல்விமான்களுக்கும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் எடுத்துக் கூறல்.

- கருத்துக் கணிப்புக்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்கள் ஆகியவற்றை பாராளுமன்ற விவாதத்தின்போது முன்வைத்தல்.

- பாராளுமன்றத்தில் தாம் வெளியிட்ட மக்கள் கருத்துக்களுக்கு அரச தரப்பிலிருந்து கிடைத்த பதில்கள் பற்றி பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுதல்.

- மக்கள் கருத்துக்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு உகந்த சந்தர்ப்பம் கிடைக்காத பட்சத்தில், அதற்கு அப்பாலான மக்கள் செயற்பாடுகளை நோக்கி மக்களை வழி நடத்துதல்.




# வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்துதல்

# வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்துதல்

புதிய நிதி ஆண்டுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம், அரச திறைசேரியினால் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கும் திணைக்களங்களுக்கும் உரிய ஒதுக்கு நிதியினை பெற்றுக்கொடுப்பதோடு செயற்பட ஆரம்பிக்கும்.

வரவு செலவுத் திட்டத்தின் செயற்பாடு ஒரு கூட்டுச் செயலாகும்.

- அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் செயற்பாட்டிற்குத் தேவையான நிதியினைப் பெற்றுக்கொடுத்தல்
- மாகாண சபைகளுக்கான ஒதுக்கீட்டு நிதியினைப் பெற்றுக்கொடுத்தல்
- அரச நிறுவனங்கள் கொள்வனவு செய்யும் பொருள்கள் மற்றும் சேவைகளுக்குத் தேவையானப் பணத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
- வரவு செலவுத் திட்டம் பற்றிய கணக்காய்வுகளை முன்னெடுத்துச் செல்லல்.
- வருட இறுதியில், வருடம் முழுவதிலும் இடம்பெற்ற வரவு மற்றும் செலவு பற்றிய வருடாந்த அறிக்கையினை வெளியிடுதல்
- வரவு செலவுத் திட்டத்தில் ஒவ்வொரு பிரிவுக்கும் எவ்வாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்ற விடயம் அந்தந்த நிறுவனங்களினதும் வரவு செலவை செயற்படுத்தும் அதிகாரிகளும் பொது மக்களும் அறிந்திருத்தல் வேண்டும்.
- வரவு செலவு சம்பந்தமாக ஒவ்வொரு நிறுவனத்தினாலும் தயாரிக்கப்படுகின்ற செயற்றிட்டம் பற்றிய சம்பந்தப்பட்டத் தரப்பினர் அறிந்திருத்தல் வேண்டும்
- அத்தோடு குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் உள்ளர்ந்த காரியங்கள் பற்றிய அறிந்திருத்தல் வேண்டும்.
- வரவு செலவுத் திட்டம் பற்றிய மறுசீராய்வுக்காக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்.

## வரவு செலவு திட்டம் செயற்படும்போது எம்மால் செய்ய முடிந்தவை எவை?

வரவு செலவுத் திட்டம் செயசற்படுவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியினை பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அத்துடன் நிதி அமைச்சர் அத்தாட்சிப்பத்திரம் மூலம் அனுமதியினை வழங்க வேண்டும். அதேபோல் நிதி ஒதுக்கீட்டுக்கான அனுமதி கிடைத்தப்பின் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் அரசாங்க திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு நிதி அமைச்சினால் அரச திறைசேரி மூலம் நிதியினைப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். அரச திறைசேரிக்கு வரி செலுத்துவோர் இதில் நேரடித் தொடர்பினைக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் அப் பணத்தினை நேரடியாகவே மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காகவே அரசாங்கம் செலவிடுகின்றது. அதாவது தரமான வீதிகள், போக்குவரத்து

வசதிகள், வசதிகளுடன் கூடிய பாடசாலைகள், சிறந்த வசதிகளைக் கொண்ட வைத்தியச்சாலைகள், புதிய தொழில்வாய்ப்புகள் போன்ற பல்வேறு காரணங்களுக்காகவே செலவிடப்படுகின்றன. அதேபோன்று அரச வளங்களை பயனளிக்கத்தக்க வகையில் பயன்படுத்திகொள்வதையும், திறமையாக முன்னெடுத்துச் செல்வதையும் கவனத்தில் கொள்ளும் அதேவேளை, வளங்கள் மற்றும் நிதி ஆகியவற்றின் வீண் விரயத்தை தவிர்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பும் மக்களுக்கு இருக்கின்றது. வரவு செலவுத் திட்டம் செயற்படுகையில் ஊழல் மற்றும் முறைகேடுகள் இடம்பெறுமாயின் சம்பந்தப்படட நிறுவனங்ள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மூலமாக அதனை பாராளுமன்றத்திற்கு அறியச் செய்வதும் மக்களது பொறுப்பாகும். பிரதேச மற்றும் மாகாண மட்டத்தில் வரவு செலவுத் திட்டத்தின் செயற்பாடுபற்றி உரிய முறையில் அறிந்திருப்பதும் கட்டாயத் தேவையாகும்.

## வரவு செலவுத் திட்டத்தினை செயற்படுத்துகையில் இடம்பெறக்கூடிய முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் எவ்வாறானவை?

- வளங்களை பயனளிக்கத்தக்க வகையில் பயன்படுத்தாமை
- வளங்கள் மற்றும் நிதி ஆகியவற்றை ஒழுங்கு மீறி உபயோகித்தல்
- வளங்களை சிக்கனமான முறையில் பயன்படுத்தாமை.

## இவ்வாறான முறைகேடுகள் மற்றும் ஊழல்களைப் பற்றி யாரிடம் புகார் செய்தல் வேண்டும்

சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அவ்வாறான நிறுவனங்கள் ஏராளம் இருக்கின்றன. இலஞ்ச ஊழல் பற்றியதாக இருப்பின், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய ஆணைக்குழுவில் புகார் செய்யலாம். மோசடியாக இருப்பின் பொலிஸ் மோசடி விசாரணைப் பிரிவில் புகார் செய்யலாம்.

அதற்காக சட்ட ரீதியாகவே உருவாக்கப்பட்ட பல நிறுவனங்கள் இருக்கின்றன. ஓம்புட்ஸ்மன், நுகர்வோர் சேவைகள் அதிகார சபை, பொலிஸ் ஊழல் மற்றும் விசாரணைப் பிரிவு, ஜனாதிபதி ஊழல் விசாரணைப் பிரிவு, பாராளுமன்ற மக்கள் மனு செயற்குழு ஆகியவற்றை உதாரணமாக கூறலாம். இருந்தும் இங்கே இருக்கின்ற முக்கிய குறைபாடு யாதெனில் இந்த நிறுவனங்கள் மற்றும ் அமைப்புக்கள் அவற்றின் செயற்பாடுகள், தமது புகார்களை எவ்வாறு முன் வைப்பது என்ற விடையங்களைப் பற்றி பொதுமக்கள் போதுமான அளவு அறிந்திராமையே ஆகும்.

## அரசின் பொறுப்புக்கூறல் பணியில் நாம் அனைவரும் பங்காளிகள் என்பதை நீங்கள் அறிவீர்களா?


இப் பொறுப்புக்கூறல் முழுமையடையச் செய்ய பொதுமக்கள் என்ற வகையில் நாம் அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பலாம்.

அரசாங்கம் தமது பொறுப்புக்கூறலை எவ்வாறு செயற்படுத்துகின்றது என்பதை தெளிவுபடுத்தலும் நியாயப்படுத்தலுக்கான காரணங்களை முன் வைத்தலும் வேண்டும்.

- நீங்கள் என்ன செய்தீர்கள்?
- நீங்கள் ஏன் அவ்வாறு செய்தீர்கள்?
- உங்களது செயற்பாடுகளை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வீர்கள்?
- அதனால் நீங்கள் பெற்றவை எவை?
- முன்னெடுக்கப்பட்ட விடையங்கள் பிழைத்திருப்பின் அதை பற்ற நீங்கள் செய்தது என்ன?
- நீங்கள் மேற்கொள்வது நாம் உங்களிடம் எதிர்பார்த்த விடயங்களையா?

## அரசாங்க நிறுவனங்கள் (அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண நிர்வாக அமைப்புக்கள்) தத்தமது வரவு செலவுத் திட்டங்களை எவ்வாற செயற்படுத்துகின்றன?

வரவு செலவு திட்டத்திற்கு பாராளுமன்றத்தின் அனுமதி கிடைத்த பின் வரவு செலவு அறிக்கைக்கு அமைய ஒதுக்கீடு செய்யப்பட்டப்ட நிதி விபரங்களை அரச திறைசேரி மூலம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டும். அதற்கு அமைய குறிப்பிட்ட நிறுவனங்களின் சம்பந்தப்படட அதிகாரிகள் அந் நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் வேலைத் திட்டங்களுக்கான செயற்றிட்டங்களைத் தயார் செய்வர். இவ்வாறு உருவாக்கப்பட்ட செயற்றிட்டங்களை அந்தந்த நிறுவனங்களின் பிரதம கணக்காய்வாளரோ அல்லது நிதி முகாமையாளர் வாயிலாகவோ மேலும் கூர்ந்து ஆராயப்பட்டு, குறித்த நிதிக்கான அங்கீகாரம் வழங்கப்படும்.



# அரச நிறுவனங்களின் கொள்வனவுச் செயற்பாடு

# அரச நிறுவனங்களின் கொள்வனவுச் செயற்பாடு

பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவுனத்தின் (Organisation for Economic Cooperation and Development) - (OECD) கருத்துக்கு அமைய இச் செயற்பாடுகள் சில கட்டங்களாக நடைபெறுகின்றன.

1. தேவையினை இனங்காணுதல்
2. அந்த தேவைகளை செய்யத்தக்க உகந்த சேவை வளங்குனர் யார் என்பதை இனங்காணுதல்.
3. குறிப்பிட்ட நேர காலத்தில் உரிய விலைக்கு, நேர்மை மற்றும் வெளிப்படைத் தன்மை மிக்க வகையில் குறிப்பிட்ட சேவை அல்லது பொருளை பெற்றுக்கொடுக்கப்படும் என்பதை உறுதிச் செய்தல்.

- பொது மக்கள் என்ற வகையில், அரசாங்கத்தினால மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகளைப் பற்றி விழிப்புடனும் விபரம் அறிந்திருப்பதன் மூலமும், ஊழல்கள் மற்றும் முறைகேடுள் இடம்பெறும் வேளைகளில் தலையிடுவதன் மூலமும், அவ்வாறான செயல்களைத் தடுப்பதில் எமது பங்களிப்பை வழங்க முடியும்.

- பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் (OECD) நிறுவனம் 2000ஆம் ஆண்டில் நிகழ்த்திய மதிப்பீட்டு அறிக்கையின்படி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அரசாங்கங்கள் மூலம் முன்னெடுக்கப்படுகின்ற சகல வழிகளினதுமான கொள்வனவுகளின் பெறுமதி அந்த நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியின் 4.5% வீதமாகும்.

- அரச நிறுவனங்களினால் யெற்படுத்தப்படுகின்ற சேவைகளை வழங்குவதற்காக விலைக்கு வாங்குதல் அல்லது கொள்வனவு அத்தியாவசிய தேவையாக இருந்த போதிலும், அச் செயற்பாடுகள் ஊழல் மற்றும் முறைகேடுகளுக்கு பலியாகக் கூடிய வாய்ப்பு இருக்கவே செய்கின்றது.

அரசாங்கத்தின் நிதி விதிமுறைகளுக்கு மாறாக அமைச்சர் ஒருவர் நேரடியாக பாகிஸ்தானிலிருந்து நிதி உதவியினைப் பெற்ற சம்பவம் ஒன்றைப் பற்றி அறிய வந்துள்ளது. (2014 ஏப்ரல் சண்டே ரைம்ஸ் பத்திரிகை)

இந்நாட்டின் தொழில்சார் மற்றும் வாணிக துறை அமைச்சர் ரி'ாட் பதியுதின் பாகிஸ்தான் அரசின் பிரதமரிடம் நிதி உதவியினை கோரியதற்கு அமைய, வடமாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு வீடமைத்துக் கொடுப்பத்றகாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை நன்கொடையாக பெற்றுக்கொடுத்துள்ளார்.

இந் நிதியினை நிதி அமைச்சின் வெளிவாரி வளங்கள் திணைக்களத்தினையும் மீறியே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறை சம்பிரதாயம் யாதெனில், ஏதேனும் ஒரு அபிவிருத்தித் திட்டத்திற்காக நிதி பற்றாக்குறை ஏற்பட்டிருப்பின அவ் விடயம் பற்றி நிதி அமைச்சின் வெளிவாரி வளங்கள் திணைக்களத்திற்கு அறிவித்து அதன் மூலம் உதவியினையோ அல்லது கடமையோ உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ரீதியில் கோருவதேயாகும்.

எந்தவொரு அரசாங்க நிறுவனமாக இருப்பினும், அதற்குத் தேவையான பொருள் அல்லது சேவையினை விலைக்கு வாங்கும்போது அதனைச் செய்வதற்காக பின்பற்றவேண்டிய குறிப்பிட்ட விதிமுறைகள் இருக்கின்றது.அதற்கு அமைய,

1. விலைகளை கோரும் முன் செய்ய வேண்டியவை (Prebidding)
2. விலை விபரங்களைக் கோருதல்
3. விலைக்கு வாங்கும் அறிவுரையினை (Purchase Order) யை வெளியிடுதல்
4. விலை கொடுத்து கொள்வனவுச் செய்த பொருள் மற்றும் சேவைகளை பரிசோதனைக்கு உட்படுத்துதல்
5. கிடைக்கப்பெற வேண்டிய நிதி பற்றிய கணக்கறிக்கையினை பேணுதல்

## விலை விபரம் கோருவதற்கு முன்னாள் செய்ய வேண்டியவை

சில அரச நிறுவனங்களின் விலைக்கு வாங்குதலை (Procurement) மேற்கொள்ளவென தனியானதொரு பிரிவு அந் நிறுவனத்திற்குள்ளேயே இருக்கின்றன. அவ்வாறான வேலைகளில் பொருள்கள் மற்றும் சேவைகளை விலைக்கு வாங்க எண்ணும்போது விலைக்கு வாங்குவதற்கான பிரிவு (Purchase Order) விலைக்கு வாங்குவதற்கான அறிவுரை ஒன்றினை அவ் அலுவலகத்திற்கான அதிகாரத்தைக் கொண்ட விலைக்கு வாங்கும் பிரிவிற்கு அனுப்ப வேண்டும். அதன் பின்னர் விலைக்கு வாங்கும் பிரிவு குறித்த பணியினை கையாளும்.

## விலைக்கு வாங்குவதற்கான அறிவுரையில் (Purchase Order) அடங்கும் விடயங்கள் எவை?

விலைக்கு வாங்க உத்தேசிக்கும் பொருள் அல்லது சேவை சம்பந்தமான விபரங்களை (Specifications) இந்த விலைக்கு வாங்குவதற்கான விண்ணப்பத்தினுள் உள்அடக்கவேண்டும்.

சில வேளைகளில் விலைக்கு வாங்குவதற்கான விண்ணப்பம் கிடைத்த பின்னர், விலைக்கு வாங்கும் (கொள்வனவுப் பிரிவு சம்பந்தப்பட்ட வழங்குனருக்கு கொள்வனவு அறிவுரை (Purchase Order) ஒன்றினை அனுப்பி வைக்கும்.

அநேகமாக அரச நிறுவனங்கள், ஒவ்வொரு வருடமும் முன்னெடுக்கும் சேவை அல்லது அடிக்கடி மேற்கொள்ளும் பொரள் கொள்வனவு தொடர்பாகவே இவ்வாறு செயற்படுவது வழக்கம். சிலவேளைகளில் குறித்த பொருள் அல்லது சேவையின் உத்தேச விலையினைவிட மிகவும் அதிகமான விலை கோரப்படும்.

**100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேலான பெறுமதியினைக் கொண்ட ஒப்பந்தவிதிகளை மீறிய அரச செலவினம்**

| வேலைத் திட்டத்தின் பெயர் | வேலைத் திட்டம் பற்றிய விபரங்கள் | குத்தகைக்காரர் முதலீட்டாளர் | மொத்த முதலீடு | பணத்தை அறிவிடும் முறை மற்றும் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் | பணம் கிடைக்கப்பெறும் முறைகள் |
|---|---|---|---|---|---|
| தெற்கு அதிவேக பாதை நீடித்தல் | தெற்கு அதிவேக பாதையினை மாத்தறை முதல் பெலியத்த வரை நீடித்தல் | சைனா ஏரோ டெக்னோலொஜி கோப்பரே'ன் | 804 மில்லியன் அமெரிக்க டொலர் | தேவைப்படும் கால எல்லை, நிபந்தனைகள் பற்றி இன்னும் கலந்தாலோ -சிக்கப்பட்டு வருகின்றது | சைனா எக்சீம் வங்கி |
| வெளிசுற்றுவட்ட அதிவேக பாதை கடவத்தை முதல் கெரவலப்பிட்டிய வரை | 9.32 கி.மீ தூரத்தைக் கொண்ட பாதை | மெட்ர்லிக்ஜிகல் கோப்பரே'ன் ஒப் சைனா | 520 அமெரிக்க டொர்கள் (67.9 பில்லியன் ரூபா) | 15 வருடகாலமும் மேதிகமாக மேலும் 5 வருடங்கள் | சைனா எக்சீம் வங்கி |
| ஹம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து மத்தள விமான நியைம் வரையான அதிவேக பாதை அமைத்தல் | 25 கி.மி அதிவேக பாதை | சைனா ஹாபர் என்சினியரிங் கோப்பரே'ன் | 412 மில்லியன் அமெரிக்க டொலர் (532 பில்லியன் ரூபா) | 15 வருட காலமும் மேலதிகமாக மேலும் 5 வருடங்களும் | எக்சீம் பேன்க் ஒவ் சைனா |
| ஹம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையத்திற்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட வீதிகளை அமைத்தல் | விமான நிலையம், துறைமுகம், கிரிக்கெட் மைதானம் ,முதலீட்டு வலயம் ,சுற்றுலா வலயம் ஆகியவற்றை இணைக்கும் 250 கி.மீ பாதை | சைனா ஸ்டேட் கன்ஸ்ட்ரக்'ன் எஞ்சினியரிங் கம்பனி லிமிடெட் | 252.5 அமெரிக்க டொலர் (33 பில்லியன் ரூபா) | 15 வருட காலமும் மேலதிகமாக மேலும் 5 வருடங்களும் | எக்சீம் பேன்க் ஒவ் சைனா |
| கம்பஹா அத்தனகல்ல, மினுவன்கொட ஆகியவற்றுக்கான ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் | 80,000 வீடுகளுக்கு நீர் வழங்குதல் | சைனா மெசின் கோபரே'ன் | 229.5 மில்லியன் அமெரிக்க டொலர் (30 பில்லியன் ரூபா) | 20 வருட காலமும் மேலதிகமாக மேலும் 5 வருடங்களும் | எக்சீம் பேன்க் ஒவ் இந்தியா |

## விலை விபரம் கோரல் பற்றிய நடவடிக்கைகள் (Bidding Process)

விலை விபரம் கோரல் நடவடிக்கையின் போது அரசாங்கத்தினால் தொழில்நுட்ப அறிவுரைகள் மற்றும் குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையின் விலை விபரம் உள்ளிட்ட ஆவணம் ஒன்றினைத் தயாரிக்கும். இவ்வாறு விலை விபரம் கோரும் நடவடிக்கைகளின் போது பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்களுக்கு அமைய, அரசாங்கத்தின் தலையீட்டுடன் வெளிப்படையான விலை விபரம் கோரும் செயற்பாடு (Open biding process) ஆரம்பிக்கப்படலாம். பெரும்பாலும் இவ்வாறான விலை விபரக் கோரல்கள் ஒப்பந்தப் பணிகளை கையாளும் சுயாதீன ஒப்பந்த சபையினால் மேற்கொள்ளப்படும். ஆனபோதிலும் திறந்த விலை கோரல் நடவடிக்கைக்கு கணிசமான பணமும் கால அவகாசமும் தேவைப்படுவதால், எதிர்பார்க்கும் பொருள் அல்லது சேவையின் விலை குறைவாக இருப்பின் விலை விபரம் கோரும் சட்டதிட்டங்களுக்கு அமைய அதற்காக நீண்ட கால நடவடிக்கை தேவையற்றதாகும்.

## விலைவிபரம் கோரும் நடவடிக்கை நடைபெறும் விதம்

வழங்குனர்களின் விலை விபரங்கள் கிடைக்கப் பெற்றப்பின், குறிப்பிட்ட காலத்திற்குள், முத்திரை இடப்பட்ட உறையில் அனுப்பி வைக்கப்பட்ட விலை விரபங்கள் அடங்கிய உரைகளைை திறந்து ஒவ்வொரு வழங்குனறாலும் வழங்கப்படும் பொருள் அல்லது சேவைகளின் விலைகள், அவர்களது நன்பகத்தன்மை, குறித்த சேவை பற்றிய அவர்களது அனுபவம் போன்ற காரணங்களை கவனத்தில் கொண்டு வழங்குனர்களைத் தேர்ந்தெடுக்கப்படும்.

## வெளிப்படையற்ற விலை விபரம் கோரும் செயற்பாடு (Closed Bidding Process)

இதன்படி ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மட்டும் விலை விபரம் கோரப்படும். இதனை ஒழுங்கற்ற முறையாக கருதப்படாத போதிலும் இதன் மூலம் சீர்கேடுகள் இடம்பெற வாய்ப்பு இருக்கின்றன. ஒப்பந்த நடவடிக்கையின் போது எல்லா நிலைகளிலும் சீர்கேடுகள் இடம்பெற வாய்ப்புகள் இருக்கின்றன.

## விலை கொடுத்து வாங்குதல் பற்றி நீங்கள் அறிவீர்களா?

விலைகொடுத்து வாங்க இருக்கும் நிறுவனத்தினால் பூர்த்தி செய்யப்பட்டு, குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையினை வழங்கும் நிறுவனம் குறித்த சேவை அல்லது பொருள்களை வழங்குவதற்கு முன்பாக அந் நிறுவனத்திற்குப் பெற்றுக்கொடுக்கப்படும் விண்ணப்படிவம்.

## இதன் உள்ளடக்கம்

கொள்வனவு பற்றிய விேட எண்
கப்பல் மூலம் அனுப்பபடுமாயின் கப்பல் வாணிப திகதி (Shipping Date)
பணம் செலுத்த வேண்டிய முகவர் (Billing address)
ஒப்பந்த விதிமுறைகள் (Order Terms)
தேவையான பொருள் அல்லது சேவையின் அளவு மற்றும் உரிய மாதிரி

குறிப்பிட்ட பொருள் அல்லது சேவையினை வழங்குதள் மூலம் விலை கொடுத்து வாங்குதலுக்கான ஆணையினை உபயோகப்படுத்தி எதிர்பார்க்கும் பொருள் அல்லது சேவை வழங்கப்பட்டுள்ளதா என்பதனை பரிசோதித்துப் பார்க்கலாம்.

கொள்வனவு ஆணையானது வாடிக்கையாளரையும் வழங்குனரையும் வஞ்சிக்கப்படுவதிலிருந்து காப்பாற்றுகின்றது.

சில சமயம் வழங்குனரால் பெற்றுக்கொடுக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை பெற்றுக்கொடுக்கப்பட்ட பின்னர் அதனை ஏற்க மறுக்கும் பட்சத்தில் விலைகொள்வனவு ஆணையினை வைத்து, தமக்கு நேரிட்ட இழப்பிற்கு எதிராக சட்ட நடவடிக்கையினை எடுக்க முயலலாம்.

## ஆய்வு அறிக்கைகள் (Inspection reports)

ஒரு நிறுவனம் தாம் கேட்டுக்கொண்ட பொருள் அல்லது சேவையினை ஏற்றுக்கொள்வதற்கு முன், அது பற்றிய நிபுணத்துவம் பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைக்கொண்டு. குறிப்பிட்ட பொருள்கள் அல்லது சேவைகள் அந் நிறுவனத்தின் கோரிக்கைக்கு பொருந்துகின்றனவா என்பதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். தமது கோரிக்கைக்கும் வழங்கப்பட்டிருக்கும் சேவை அல்லது பொருள்களுக்கும் இடையே காணப்படுகின்ற வேறுபாடுகள் அல்லது வித்தியாசங்கள் பற்றி இவ் ஆய்வின் மூலமே அறிக்கை இடப்படும். அதற்கு அமைய விலைக் கொள்வனவுப் பட்டியலில் குறிப்பிட்ட விடையங்களுக்கு ஒத்துப் போகாத பொருட்கள் அல்லது சேவை வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில் இறுதிக் கட்டணமாக உறுதி அளிக்கப்பட்ட பணத் தொகையிலிருந்து கட்டணத்தை குறைப்பது போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

## பணம் செலுத்தல் பற்றிய கணக்கறிக்கை (Accounts Payable)

வாடிக்கையாளர் நிறுவனம் குறிப்பிட்ட சேவை அல்லது பொருள்களை அதனை கோரிய நிறுவனத்திடம் ஒப்படைத்ததின் பின், அச் சேவை வழங்கல் நிறுவனம் தமக்கு கிடைக்கப்பெற வேண்டிய தொகையினை குறிக்கும் விற்பனைப்பட்டியலை வெளியிடும். அவ் விற்பனைப் பட்டியலில் பொருள் அல்லது சேவைப்பற்றிய தொழில்நுட்ப அறிக்கை, எண்ணிக்கை ஒரு அளவையின் விலை, அதன் விசேட இலக்கம், மற்றும் விலைக் கொள்வனவு இலக்கம் ஆகியன குறிக்கப்பட்டிருக்கும்.

## கொள்வனவின் பொது இடம்பெறக்கூடிய ஊழல் மற்றும் முறைகேடுகள்

ஒப்பந்த (வுநனெநச) நடவடிக்கையின் அனைத்துக் கட்டடங்களிலும் முறைகேடுகள் இடம்பெற வாய்ப்புகள் இருக்கின்றன. விலை விபரம் கோரலுடன் தொடர்புடைய, தொழில்நுட்ப வழிகாட்டியினை ஒப்பிடுகையில் பெரும்பாலும் சீர்கேடுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

சுயாதீன ஒப்பந்தச் செயற்பாட்டை நோக்கிச் செல்வதைத் தடுப்பதற்காக ஏதேனும் ஒரு பொருள் அல்லது சேவையினைக் கொள்வனவுச் செய்வதற்காக தயாரிக்கப்படுகின்ற ஒப்பந்தத்தினை இரண்டு கட்டங்களாக செய்யலாம். அதாவது குறைந்த விலையினைக் குறிப்பிட்டும், தாம் விரும்பும் இரண்டு ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்து குறிப்பிட்ட ஒப்பந்தத்தினை கையளிக்கலாம், அல்லது ஏதேனும் ஒரு ஒப்பந்த்தினை தாம் விரும்பும் வழங்குனருக்கு பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் தொழில்நுட்ப அறிக்கையினைத் தயாரிக்கலாம்.

> பாரிய திட்டங்களை முன்னெடுக்கும் போது, சம்பிரதாயபூர்வமான ஒப்பந்த முறைகளை கையாள பெருமளவு காலத்தை விரையம் செய்ய இயலாது என நிதி அமைச்சின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர அவர்கள் தெரிவித்திருக்கின்றார்.
>
> சண்டே ரைம்ஸ் பத்திரிகை

## கொள்வனவு நடவடிக்கையின்போது, ஊழல் மற்றும் முறைகேடுகள் இடம்பெறக்கூடிய விதம்

- கொள்வனவுப் பணியினைக் கண்காணிக்கும் உத்தியோகத்தர் தமது விருப்பத்தை முறையற்றவிதத்தில் உபயோகிக்க வாய்ப்பு இருக்கின்றது. உதாரணமாக, பொதுவாக எல்லா இடங்களிலும் உபயோகப்படுத்தப்படுகின்ற கணினியின் விலை விபரங்களை எல்லோரும் வெளிப்படையாகவே அறிந்திருப்பதால், அவ்வாறான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பட்டியலைத் தயாரித்தல் நேரடியான அதேநேரம் சரியானதாக அமையக்கூடும்.

- ஆயினும் வைத்திய உபகரணங்கள் போன்றவற்றைக் கொள்வனவு செய்வது தொடர்பான கொள்கைத் திட்டங்கள் மிகவும் எளிதானதாக இருப்பதால் அவ்வாறான கொள்வனவுகளின்போது ஊழலுக்கான அதிக வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

- வழங்குனர்களும் கொள்வனவு நடவடிக்கையின் போது ஊழல் மற்றும் வஞ்சக செயல்களில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக வழங்குனர்களும் விலையினைக் கோருவர். அதன்போது அவ் வழங்குனர்களில் ஒருவர் தமது விலையினைச் சற்று குறைத்து ஒப்பந்தத்தினை தமதாக்கிக்கொள்ள முயல்வார்.

- சந்தையின் பங்குதாரிகளின் இணக்கப்பாட்டின் மூலமும், பொருள்கள் அல்லது சேவைகளை வேண்டி நிற்கின்ற பிரதான ஒப்பந்தக்காரர் நிறுவனத்துடன் இணைந்து செயற்பட வழங்குனர் விருப்பம் தெரிவிக்கக்கூடும். அரச வளங்கள் அரச நிறுவனங்களுக்கே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. அந்த நிறுவனம் குறிப்பிட்ட வளங்களை முறைகேடாக உபயோகித்து, வஞ்சகச் செயல் மற்றும் ஊழல் ஆகியவற்றில் ஈடுபடும்பட்சத்தில் அவ்விடயம் பற்றி புகார் செய்யக்கூடிய 38 நிறுவனங்கள் இருக்கின்றன.

    - இலஞ்ச அல்லது ஊழல் விசாரணை ஆணைக்குழு
    - நுகர்வோர் விவகார அதிகாரசபை
    - அரசகரும மொழிகள் ஆணைக்குழு

  என்பன அந் நிறுவனங்களில் சிலவாகும்

**தேசிய கொள்முதல் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட கொள்முதல் வழிகாட்டல் அறிக்கைக்கு ஜனாதிபதி அவர்கள் வழங்கிய செய்தி.** *

அபிவிருத்தி எல்லா துறைகளையும் உள்வாங்கும் விதத்தில் சமநிலைத் தன்மையினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும், அதன் பயன் நாட்டின் எல்லா சமூகங்களுக்கும் சமமாகப் பங்கிடப்பட வேண்டுமெனவும், அதன் மூலம் மக்களின் வாழ்க்கை தரம் முன்னேற வேண்டுமெனவும் இலங்கை அரசு நம்புவதால், அதற்கு மிகுந்த முக்கியத்துவத்தை வழங்கப்பட்டிருக்கின்றது. எதிர்பார்க்கப்படுகின்ற இந்தப் பலன்களை அடைய அபிவிருத்தித் துறையில், உடனடியாக வெளிப்படைத் தன்மையும், தூய்மைத்தன்மையும் இருத்தல் தேவைப்படுகின்றது. இதன் போது பொருள்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்தல் முக்கிய விடயமாக அமைகின்றது.

நிறுவனங்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக பொது நிதியம் மற்றும் வெளியிலிருந்து பெறப்படும் நிதியங்களிலிருந்தே பணம் வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு அமைய அபிவிருத்திக்காக நிதியினைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவனங்களுடன் பணி ஆற்றும்போது பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்கள் கைவசம் இருப்பது மிக முக்கியத் தேவையாகும்.

அதற்காக, ஜனாதிபதியின் உத்தரவின்படி தேசிய செயற்பாட்டு கொள்முதல் நிறுவனம் ஒன்று நிறுவப்படும். கொள்முதல் சம்பந்தப்பட்ட விடயங்களைக் கற்றல் மற்றும் சீர்திருத்தத்திற்கான அதிகாரங்கள் இந் நிறுவனத்திற்கு கிடைக்கும். தேசிய கொள்முதல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தின் பின்னர் தேசிய மட்டத்திலான பொது கொள்முதலுக்கான அறிக்கைகளை ஆராய்ந்து, நிதி வசதிகளை வழங்கும் நிறுவனங்களின் நடவடிக்கைகளுக்கு உகந்த முறையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் கொள்முதல் தொடர்பான வழிகாட்டல்களைத் தயாரிப்பதென்பது பாராட்டத்தக்க விடயமாகும்.

கொள்முதல் வழிகாட்டல் தேசிய அபிவிருத்தியின் அனைத்து பிரிவினருக்கும் மொத்த அபிவிருத்தியின் இலக்குகளைப் போலவே தனியான நிறுவனங்களினது அபிவிருத்தி நோக்கங்களையும் குறிப்பிட்ட காலத்தைவிட குறைந்த காலத்திற்குள் குறைந்த அளவில் நிறைவேற்றிக்கொள்ளும் என்பது எனது நம்பிக்கையாகும்.

* Procument Guidlines 2006 - Goods and Works - (National Procument Agency)




# வரவு செலவுத் திட்டம் செயற்படுவதைப் பற்றிய மீளாய்வு செய்வது எவ்வாறு?

# வரவு செலவுத் திட்டம் செயற்படுவதைப் பற்றிய மீளாய்வு செய்வது எவ்வாறு?

ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் அந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கை எலலா அரச நிறுவனங்களிலிருந்தும் அனுப்பி வைத்தல் வேண்டும். அக் கணக்கு அறிக்கைகளை ஆராயும் கணக்காய்வுத் தலைமை அலுவலர், அது பற்றிய அறிக்கையினை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிப்பார். தற்போதைக்கு 2012 ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையே வெளியிடப்பட்டிருப்பதுடன், இவ் அறிக்கையினை இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

அது அவ்வாறாயினும், இவ் அறிக்கையினை எல்லோராலும் இலகுவில் வாசித்து அதன் விடயங்களைப் புரிந்து கொள்ள முடியுமா? அத்தோடு அந்த விடயங்களை எமக்குத் தெளிவுபடுத்தக்கூடியவர்கள் இருக்கின்றனறா? அந்த விடயங்கள் எந்த அளவு நம்பத்தக்கவை.

அவ் விடயங்கள் பற்றி நாம் என்ன செய்ய வேண்டும்? உண்மையிலேயே அவ்விடயம் தொடர்பில் எம்மால் ஏதேனும் செய்ய முடியுமா? இவ்வாறு வரவு செலவு அறிக்கை பற்றி ஆராய்ந்து பார்த்து அறிக்கை வெளியிடும் கணக்காய்வுத் தலைமை அலுவலர் யார்? அவர் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு எவை?

கணக்காய்வுத் தலைமை அலுவலரின் கடமை மற்றும் அவரால் நிறைவேற்றக்கூடிய விடயங்களைப் பற்றி அரசியல் யாப்பின் 153 மற்றும் 154 ஆம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கணக்காய்வுத் தலைமை அலுவலர் (Auditor General)

ஒரு நாட்டின் நல்லாட்சி சீர்குலைவதினாலேயே வீண் விரயம் மற்றும் ஊழல் ஆகியன இடம்பெறுகின்றன. அரச நிறுவனங்களின் நிதி, செலவினம் பற்றிய முறை ஊழல் மிக்கதாக இருக்கும் பட்சத்தில் அதற்கு சமாந்தரமாக அந்த நிறுவனங்களின் சேவையினை நாடும் பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் பாதக நிலை ஏற்படும். அந் நிலையினைத் தவிரத்துக்கொள்ளும் நோக்கிலேயே கணக்காய்வுத் தலைமை அலுவலர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள் பற்றிய சரியான கணக்காய்வு அறிக்கைகளை பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பித்து நல்லாட்சியினை பலப்படுத்துவதற்கு பக்கப்பலமாக இருப்பதே கணக்காய்வுத் தலைமை அலுவலரின் பொறுப்பாகும். அரச நிறுவனங்களில் நிதி முறைகேடுகள் இடம்பெற்றிருப்பின் அவற்றை வெளிப்படுத்துவதன் மூலம் தேவையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து நிதி முறைகேடுகள் இடம்பெறுவதை தடுக்கக்கூடிய தன்மையே இப் பதவியின் சிறப்பம்சமாகும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் மாகாண நிர்வாக அமைப்புகள் ஆகியவற்றின் ஊழல்கள் மீது கூடுதல் வரியினை விதிக்கும் அதிகாரம் கணக்காய்வுத் திணைக்களத்திற்கே இருக்கின்றது. இத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் பிரதேச அலுவலகங்கள் மூலம் மக்கள் மேற்கொள்ளும் புகார்களை ஏற்றுக்கொள்ள வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கணக்காய்விற்கு உள்ளாக்கப்படும் நிறுவனங்கள்

- அரச இலாகாக்கள்
- நீதி சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்
- அமைச்சரவை அலுவலகம்
- அரச உடமையாக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள்
- அரச கூட்டுத்தாபனங்கள்
- தேர்தல் ஆணையாளர் அலுவலகம்
- பாராளுமன்ற பொதுச் செயலாளர் அலுவலகம்
- நிர்வாக சேவைகள் பற்றிய பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்
- அரச சேவைகள் ஆணையாளர் அலவலகம்

கணக்காய்வாளர் திணைக்களத்தின் பணிகளுக்கு பலன் கிடைக்க வேண்டுமாயின் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது கட்டாயத் தேவையாகும்.

அரச வரவு செலவுத் திட்டம் மூலம் ஒதுக்கப்படுகின்ற வருவாய் மற்றும் செலவினம் பற்றிய சுயாதீன விசாரணையினை மேற்கொள்வதற்கென அரசியல் யாப்பின் 153ஆம் வாக்கியம் மூலம் ஒரு நபருக்கு வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன.

- எந்தெந்த அரச நிறுவனங்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தமது விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற விபரம் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- எந்தெந்த விடயங்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் விசாரணை நடைபெற வேண்டும் என்பதை குறிப்பிடாது அவ் விடயத்தை வெளிப்படையாக வைக்கப்பட்டிருக்கின்றது.
- கணக்காய்வாளருக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், குறிப்பிட்ட சொத்துக்கள் பற்றி ஆராய்ந்துப் பார்த்து, அத்தோடு சம்பந்தப்பட்ட நபர்களிடம் தகவல்களைக் கேட்டு அறிவதற்கும் யாப்பு ரீதியான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டிருக்கின்றன.
- கணக்காய்வாளர் தமது அறிக்கையினை நிதி ஆண்டு முடிவடைந்து பத்து மாதங்கள் பூர்த்தி அடைவதற்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் அது ஒரு பகிரங்க அறிக்கையாவதுடன் அதனைப் பொது மக்களும் பெற்றுக்கொள்ளலாம்.
- கணக்காய்வாளர் தமது கணக்காய்வுகளின் முடிவில், அரச கூட்டுத்தாபனங்கள், மாகாண நிர்வாக அமைப்புக்கள் மற்றும் சட்ட ரீதியான சபைகள் பற்றிய தமது கணக்காய்வு ரீதியான கருத்துக்களைத் தெரிவிப்பார். அவர் தமது கணக்காய்வுகளை நிதி மற்றும் செயற்திறன் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளுவார். அரச நிறுவனங்களின் நிதி மற்றும் செயற்திறன்

ஆகியவற்றினை ஆராயவதென்பது மிக முக்கியமான விடையாகும். காரணம் அரச நிறுவனங்களின் செயற்திறன் மூலம் மக்கள் சேவை அல்லது அபிவிருத்தி என்பனவற்றையே எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்காக அந் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வளங்கள் உரிய முறையிலும், வீண் விரயமற்ற வகையிலும் பயன்படுத்தப்பட்டு இருக்கின்றனவா என்பதை அறிந்து கொள்வது மக்களது உரிமையாகும். அத்தோடு கணக்காய்வாளர் அறிக்கையினை பரிசீலித்துப் பார்ப்பதற்கு உகந்த சூழ்நிலை போது மக்களுக்கு இருத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் செயற்திறன் மற்றும் நிதியுடன் தொடர்புடைய விபரங்கள் கணக்கறிக்கையில் இடம்பெறும். இந் நிதி அறிக்கைகள் மூலம் நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிய உண்மையான, நியாயமான நிலமை வெளிப்படுத்தப்படுகின்றனவா என்பதை கணக்காய்வாளர் எடுத்துக் கூறுவார் என்ற விடயம் முக்கியமானதாகும்.


## கணக்காய்வாளர் அறிக்கை (Auditor General Report)

வருட இறுதியில் 10 மாதங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் கணக்காய்வாளர் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும். இவ் அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தப் பின், அது பகிரங்க அறிக்கையாவதால் அதனை பொதுமக்களும் பெறக்கூடிய வாய்ப்பு கிடைக்கின்றது.

அதன் பின்னர் இவ் அறிக்கை கோப் மற்றும் கோபா குழுக்களிடம் கையளிக்கப்படும். அதையடுத்து பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை 125 மற்றும் 126க்கு அமைய, அரச நிறுவனங்களின் செயற்திறன் முகாமைத்துவம், நிதி நிர்வாகம் ஆகியவற்றை ஆராய்வதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் அழைக்கப்படுவர். கணக்காய்வாளர் நாயகம் மற்றும் திறைசேரி உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவர். இக் குழுவினரின் விசாரணைகளின் பின்னர் அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஆரச கணக்கு செயற்குழுவின் அறிக்கை மற்றும் அரச முதலீடுகள் பற்றிய செயற்குழு அறிக்கை என அழைக்கப்படுவதும் இவ் அறிக்கைகளே

## கணக்காய்வாளர் தமது கணக்காய்வுகள் முடிவில் மூன்ற விதமாக கருத்துக்கள் வெளியிடுவார்.

- பாதகமான கருத்து (Adverse Opinion)
- தகுதியான கருத்து (Qualified Opinion)
- தகுதியற்ற கருத்து (Un Qualified Opinion)
- கருத்து தெரிவிப்பதை தவிர்த்துக் கொள்ளுதல் (Disclaimer)




வெளிப்படுத்தப்பட்ட கணக்கு விபரங்களிலிருந்து உண்மையான, நியாயமான தன்மை காணப்படுமாக இருப்பின் நிபந்தனையற்ற சாதகமான கருத்தினை தெரிவிப்பதுடன், அவ்வாறான கருத்தை வெளியிட முடியாத வகையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் இருப்பின் நிபந்தனைக்கு உட்படுத்தப்பட்டக் கருத்தையும் வெளியிடுவார். உண்மையான நியாயமான தன்மையினை கணக்காய்வின்போது வெளியிடமுடியாத நிலமை காணப்படும்பட்சத்தில் கருத்து வெளியிடுவதை தவிர்த்துக் கொள்வார்.

கணக்காய்வு கருத்தினை வெளியிட வேண்டுமாயின் கீழ் காணும் காரணிகள் பூர்த்தியாக வேண்டும்.

- கணக்காய்விற்குத் தேவையான சகல தகவல்களையும் பெற்றுக்கொள்ளுதல்.
- உரிய முறையில் அறிக்கைகளை தயாரித்திருத்தல்.
- உரிய சட்டதிட்டங்கள், அடிப்படைகளுக்கு அமைய கணக்கு வைப்புகளை முன்னெடுத்திருத்தல்.
- வெளியிட்டிருக்கும் நிதி அறிக்கைகள் உண்மையான நியாயமானதாக இருத்தல்.

கணக்காய்வாளரின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின் அது ஒரு பகிரங்க ஆவணமாகிவிடுகின்றது. அதன் பின் அதனை அச்சிடுமாறு பாராளுமன்றம் உத்தரவிடும்.

கணக்காய்வாளர் அறிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தின், கோப் மற்றும் கோப்பா ஆகிய 2 செயற்குழுக்கள் கற்கையில் ஈடுபடுவதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும்.

## கணக்காய்வு அறிக்கையைப் பற்றி எம்மால் திருப்தி கொள்ள முடியுமா?

கணக்காய்வாளருக்கு அரசின் பொது நிர்வாகங்கள் மீதான ஆய்வினை மாத்திரமே மேற்கொள்ள அதிகாரம் இருக்கின்றது. முழுமையான அல்லது ஒரு பகுதி அரச பொறுப்பில் இருக்கின்ற நிறுவனங்கள் மீதான ஆய்வினை மேற்கொள்ளும் அதிகாரம் அவருக்கு இல்லை.

2012ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் அறிக்கையின்படி, அவ்வாறான 70 நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றின் மூலதனத்தின் பெறுமதி 40.26 பில்லியன் ரூபாவாகும். 2012ஆம் ஆண்டு வரை இவ்வாறான 33 நிறுவனங்கள் பொது வர்த்தகம் எனும் தலைப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

(2012 கணக்காய்வாளர் அறிக்கை)

## அரசாங்க கணக்குப் பற்றிய செயற்குழு (COPA)

தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் 31 மந்திரிமார்களைக் கொண்ட அரச கணக்குப் பற்றிய செயற்குழுவின் பணியாக பொதுச் செலவினம் பற்றி பாராளுமன்றத்தின் முன், உகந்ததெனக் கருதும் கணக்குகளையும் அவை தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கைகளும் பிரதேச அதிகார சபைகள் பற்றிய கணக்காய்வாளர் அறிக்கையும் ஆராய்வதும் அமைந்துள்ளது.

கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட ஏதேனும் ஒரு திணைக்களம் அல்லது பிரதேச அதிகார சபையின் நிதி நிலை பற்றிய செயற்பாடு மற்றும் பொதுவாக முகாமைத்துவம் பற்றியும் அத்தோடு தொடர்புடைய எந்தவொரு விடயமாக இருப்பினும் அவற்றைப் பற்றிய அறிக்கையினயும் இத்தெரிவுக்குழு பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

செய்குழுவினால் நியமிக்கப்படும் ஏதேனும் ஒரு திணைக்களம் அல்லது பிரதேச நிலமை மற்றும் முகாமைத்துவம் ஆகியன பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கும், செயற்குழுவின் தேவை கருதி அதன் அங்கத்துவர்களை கொண்ட உப செயற்குழுவினை நியமிற்பதற்கும் அதிகாரமும் இச் செயற்குழுவிற்கு இருக்கின்றது.

# 2007ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் அறிக்கையினை அடிப்படையாக கொண்டு,

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
அடையாளம் காணப்பட்ட இழப்பீடுகள்
கீழ்காணும் கணக்காணிப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

எ) கொழும்பு நகரின் கட்டடம் ஒன்றினை சீர்திருத்துவதற்கான ஒப்பந்தக் கோரலுக்காக பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்காக 31,194 ரூபா செலவு செய்யப்பட்டிருக்கின்றது. நிறைவேற்றுச் சபையின் தீர்மானத்திற்கு அமைய மேற்குறிப்பிட் ஒப்பந்தக் கோரலை இரத்துச் செய்வதற்காக் 10,925 ரூபா செலவில் மீண்டும் பத்திரிகை விளம்பரம் ஒன்றினை பிரசுரித்திருக்கின்றார்கள். ஆக இத் தீர்மானத்தினால் இந் நிறுவனத்திற்கு ஏற்பட்டிருக்கும் இழப்பீட்டின் பெறுமதி 42,100 ரூபாவாகும்.
பி) 1990ஆம் ஆண்டில் 4.25 மில்லியன் ரூபா பெறுமதி மிக்க வாகன உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்து உரிய இடத்தில் தகுந்த முறையில் பாதுகாப்பாக வைக்கத் தவறியதால், அவை துரப்பிடித்து பாவனைக்கு உதவாத நிலையில் இருக்கின்றது என்ற விடயம் குறிப்பிட்ட வருடத்தில் நடத்தப்பட்ட கலந்தாலோசனையின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சி) 1,021,425 ரூபா பெறுமதிமிக்க உபயோகப்படுத்தப்படாத 40,000 சிமந்து உறைகள் தூ சிபிடித்து நனைந்து இருப்பதால் உபயோகத்திற்கு எடுக்காது அப்புறப்படுத்தப்பட வேண்டி உள்ளதாக கணக்குப் பிரிவு தெரிவித்திருக்கின்றது.
டி) ஓய்வுதிய கொடுப்பனவை தாமதித்து பெற்றுக்கொடுத்ததால் 42,068 ரூபா மேலதிக வரி அறவிடப்பட்டுள்ளது.
இலங்கை வங்கி
9) கணினிகள்
ை. இலங்கை வங்கி (ஐடீஆ.ீகைெழஅைெ) பரிமாற்றல்
5,139,463 ரூபா பெறுமதியான பொருட்கள் ஒப்பந்தப்பணி கோராமல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இக் கொள்வனவிற்குத் தேவையான தொழில்நுட்ப குழு அறிக்கையும் பெறப்படவில்லை. தலைவரின் கருத்தின்படி ஏதோவொரு காரணத்திற்காக ஒப்பந்தப் பணியினைப் பெறாது, அதற்கு மிக அண்மித்த செயலாகிய பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

ைை) இவ் வங்கியினால் 2,864,362 இலச்ச ரூபாய் பெறுமதியான கணினி மென்பொருள்களை ஒப்பந்தப்பணியின்றி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இக் கொள்வனவின் பின், பொருள்களை பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் (புழழனள சநஉநைெநன ழெவந – புசுே) உபயோகப்படுத்தாது விடப்பட்டுள்ளது. தலைவரின் கருத்தின்படி ‘ஒப்பந்தத்தாரப் பணியினை நாடாது மேற் குறிப்பிட்ட பொருள்களின் விே'டத் தன்மை, அவற்றை விற்பனை செய்யும் வியாபாரிகளின் தட்டுப்பாடு, அப் பொருள்களின் அவசரத் தேவை ஆகியவையினாலேயே அவ்வாறு பெறப்பட்டுள்ளது.
தேசிய வீடு அபிவிருத்தி அதிகாரச் சபை, 100 வீடுகளைக் கொண்ட அவிசாவலை மாணிக்காத்தோட்ட வீடமைப்புத் திட்டம்.
கீழ்காணும் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன.
ை) ஒப்பந்ததாரர் 2002ஆம் ஆண்டில் திட்டத்தை கைவிட்டிருக்கின்றார். இது தொடர்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 10.6 மில்லியன் ரூபாவை செலுத்த வேண்டி இருந்த போதிலும் இதுவரை அதனைப் பெறுவதற்கான எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.
ைை) கணக்கு அறிக்கைகளின்படி 76.07 மில்லியன் ரூபா இதுவரை இத்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருப்பதுடன், பூர்த்தி செய்யப்பட்ட 76 வீடுகள் விற்பனைக்காக வீட்டு நிதிய கூட்டுத்தாபனத்திடம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இது பற்றிக்கூட இன்னும் உடன்படிக்கையினை ஏற்படுத்திக்கொள்ளப்படவில்லை.

## பொது நிறுவனம் பற்றிய செயற்குழு (COPE)

இது தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படுகின்ற 31 மந்திரிகளைக் கொண்ட செயற்குழுவாகும். பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்ட அரசக் கூட்டுத்தாபனத்திலோ, அல்லது ஏதேனும் ஒரு எழுத்து மூல சட்டத்தின் பிரகாரமோ அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்ட வர்த்தக அல்லது வேறு நிறுவனத்தின் சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட கணக்கு, வரவு செலவு மற்றும் வருடாந்த மதிப்பீடு, நிதி நிலமை, நிதிச் செயற்பாட்டுப் பணிமுறை மற்றும் பொது நிர்வாகம் பற்றியும் அது தொடர்பாக தோன்றியுள்ள எந்த விடயமாக இருப்பினும் அவற்றைப் பற்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்தலே இக் குழுவின் பணியாகும்.

செயற்குழுவினால் குறிப்பிடப்படுகின்ற அரச நிறுவனத்தின் அனைத்து கணக்குகள், வரவு செலவு மற்றும் வருடாந்த மதிப்பீடுகள், நிதி நிலமை, மற்றும் முகாமைத்துவம் ஆகியவற்றை ஆராய்ந்து அதுபற்றிய அறிக்கையினைப் பெறுவதற்காக செயற்குழுவின் அங்கத்தவர்களைக் கொண்ட உப செயற்குழு ஒன்றினை நியமிக்க முடியும்.

செயற்குழுக்களுக்கும், உப செயற்குழுக்களுக்கும் உரிய பணிகளை பூர்த்திச செய்வதற்கு தேவைப்படும் பட்சத்தில் எந்தவொரு நபரையும் அழைத்து விசாரணை செய்வதற்கான அதிகாரமும், கடிதங்கள், ஆவணங்கள், களஞ்சியச்சாலைகள் உட்பட சொத்துக்களைச் சென்று பார்வையிடும் அதிகாரம் வழங்கப்பட்டிருகின்றது.

செயற்குழு கூடுவதற்கான குறைந்தபட்ச உறுப்பினர் எண்ணிக்கை 04 மந்திரிகளாகும். இந்த ஒவ்வொரு செயற்குழுவும் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் சகிதம் 31 அங்கத்தவர்களைக் கொண்டதாக இருக்கும்.

கோப் (உழிந) எனும் அரச கணக்கு செயற் குழுவினால் அமைச்சுக்கள், திணைக்களங்கள், மற்றும் மாகாண நிர்வாக அமைப்புகளுடன் சம்பந்தப்பட்ட செயற்திறன் மற்றும் கணக்குகள் ஆகியனவே ஆராயப்படுகின்றன.

இக் குழு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களை அழைத்து கணக்காய்வாளரின் கண்காணிப்பு சகிதம், நிறுவனங்களின் செயற்திறன், முகாமைத்துவம், ஆகியன தொடர்பில் கணக்காய்வாளரின் ஆய்வு பற்றி கேட்டறியும். அவ் விடயம் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமாக அச்சிடப்படும். அதனைச் செயற்குழு அறிக்கை எனவும் கருதப்படும்.

### அரச கணக்காய்வுப் பணி எந்த அளவிற்கு மக்களின் தகவல் அறிந்துகொள்ளும் உரிமையினை மதித்து நடக்கின்றது?

2014 மே மாதம் ஹம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தளை விமான நிலையம் ஆகியவற்றைப் பார்வையிடச் சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்கள், குறிப்பிட்ட அபிவிருத்திப் பணிகள் பற்றிய உரிய கணக்காய்வு அறிக்கையினைப் பெற்றத்தருமாறு பாராளுமன்றத்தில் கோரினார்கள்.




# வரவுசெலவு செயற்பாட்டில் எமது பங்களிப்பு என்ன?

# வரவுசெலவு செயற்பாட்டில் எமது பங்களிப்பு என்ன?

வரவு செலவு செயற்பட்டின்போது பொதுமக்கள், கல்விமான்கள், சிவில் அமைப்புக்கள், மற்றும் அரசியலில் ஈடுபாடு கொண்டவர்கள் என்ற வகையில் எம் அனைவருக்கும் ஒரு கடமைப்பாடு இருக்கின்றது. நாட்டின் அபிவிருத்தியினை ஏற்படுத்ததக்க வகையில் உரிய நேரத்தில் நாம் பெறும் சேவைகளுக்கான வரிகளை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுப்பதும், அவ்வாறு எம்மிடமிருந்துப் பெற்றுக்கொள்ளும் பணத்தினை உரிய முறையில் பயன்படுத்தபடுகின்றனவா என்பதைப் பற்றி விழிப்புணர்வுடன் இருப்பதும், உரிய பணி முன்னெடுக்கப்படாத பட்சத்தில் அவ் விடயத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் புகார் செய்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதும் அப்பொறுப்பின் மிக முக்கியமான அம்சமாகும்.

## இதன்போது பொதுமக்கள் என்ற வகையில் எமது பொறுப்புக்களாக,

- எம்மிடமிருந்த வரியினைப் பெற்ற விதம் மற்றும் அதை செலவிட்ட விதம் ஆகியன எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைய, செயற்திறனும் ஆற்றலும் மிக்க வகையில் அமைந்திருந்தா என்பதை தெளிவுபடுத்தும் சுயாதீன அறிக்கை என்பதால் அதனை வாசித்தல்.
- வரவு செலவு அறிக்கை உட்பட ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ள வசதி செய்வதுடன் அத் தகவல்களை எளிய முறையில் தெளிவாக மக்களுக்கு கிடைக்கச் செய்தல்.
- கணக்காய்வாளரின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் அதில் காணப்படுகின்ற விடயங்கள், சிக்கலான விடயங்கள் ஆகியனவற்றை உரிய முறையில் மக்களுக்கு அறியச் செய்ய ஊடகத்திற்கு உகந்த வழிமுறைகள் இருத்தல் வேண்டும்.
- அத்தோடு கல்விசார் சமூகம், சிவில் அமைப்புச் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் வரவுச்செலவுடன் தொடர்புப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம், கணக்காய்வாளர்கள் அறிக்கை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து அதுபற்றி மக்களுக்கு அறிவூட்டும் திட்டங்களை அமைத்தல் வேண்டும்.
- வரவு செலவு பற்றிய அறிக்கைகள் வெளிவந்த பின் அது தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்றிட்டங்கள் பற்றியும், உரிய நடவடிக்கைகளை எடுக்காத விடயங்கள் பற்றியும் மக்களுக்கு எடுத்துக்கூறும் வழிமுறைகள் இருத்தல் வேண்டும். வரவு செலவு அறிக்கை வெளிவந்ததன் பின்னர், அவற்றை பொதுமக்கள் எளிதில் பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்களான நூலகங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு பிரதிகளைப் பெற்றுக்கொடுப்பது நிதி அமைச்சின் கடமையாகும்.
- பொதுமக்கள் என்ற வகையில் வரவு செலவுத் திட்ட உருவாக்கலில் கலந்து கொள்ளக்கூடிய இன்னுமொரு சந்தர்ப்பமாகிய, “பங்கேற்பு வரவு செலவு” திட்டத்தில் பங்கேற்றல் வேண்டும்.

## இலங்கையின் வரவு செலவு நடவடிக்கைகளில் அதன் வெளிப்படைத் தன்மை தளர்ந்துள்ளதாக சர்வதேச ஆராய்ச்சி அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

2012ஆம் ஆண்டில் இன்டர்நெ'னல் பட்ஜட் பார்டிரீபே'ன் மூலம் வெளியிடப்பட்ட ஆய்வு அறிக்கையின்படி, 2008ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில், வெளிப்படைத் தன்மை, மக்கள் பங்கேற்பு ஆகிய அம்சங்களில இலங்கை 2012ஆம் ஆண்டில் கீழ் நோக்கிச் சென்றுள்ளது. இவ்வாறு வரவு செலவு தொடர்பில் வெளிப்படைத் தன்மையற்ற நிலையினை பெற்றிருக்கும் ஏனைய நாடுகளாக எகிப்து, மெசிடோனியா, நைஜீரியா, ரொமேனியா ஆகியனவே இருக்கின்றன.


100 நாடுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ் ஆய்வுகளுக்கு அமைய இலங்கை 2008ஆம் ஆண்டில் பெற்றிருந்த நிலையிலிருந்து கீழேச் சென்றுள்ளதால் மூன்றாம் இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதன் போது இலங்கை 21 புள்ளிகளையும், செம்பியா 32 புள்ளிகளையும், எகிப்து 36 புள்ளிகளையும் பெற்றிருக்கின்றது.

## உண்மையாகவே பங்கேற்பு வரவு செலவு திட்டத்தில் பொதுமக்களால் பங்கேற்க முடியுமா?

நிதி நிர்வாக செயற்பாடுகளில் மக்கள் பங்கேற்பு வளர்ச்சி பெறுவதற்கு உதவியாக அமைவதுடன், பொறுப்பு மிக்கதன்மை மற்றும் வெளிப்படத்தன்மை ஆகியவற்றை தக்க வைத்துக்கொள்வதற்கு பங்கேற்பு வரவு செலவு வசதியாக அமைகின்றது. அத்தோடு பங்கேற்பு வரவு செலவு மூலம் பிரதேச நிர்வாகத்தின் நிதிச் செயற்பாடுகள் முறையாக கணக்கு வைக்கப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் அதன் மூலம் அந் நிறுவனங்களிலோ அல்லது அதற்கு புறம்பானவர்களோ அந்த நிறுவனத்தின் நிதியினை தகாத முறையில் கையாளுவதைத் தவிர்க்கப்படுகின்றது. இதன் இன்னுமொரு முக்கிய அம்சம் யாதெனில் தேவைகளின் முக்கியத்துவத்தை இனங் காண்பதற்கும், வரவு செலவு தயாரிப்பின்போது அதில் குறைந்த வருமானத்தைப் பெறும் நகரவாசிகளை இணைத்துக் கொள்வதற்கும் வாய்ப்பு கிட்டுவதேயாகும். இதன்போது

- பெண்கள், இளைஞர்கள், வறியவர்கள் உட்பட கவனத்தை செலுத்தப்பட வேண்டியவர்கள் உள்ளிட்ட பொதுமக்கள்.
- தேசிய மற்றும் பிராந்திய பிரதிநிதிகள்
- நகர அல்லது பிரதேச சபை உறுப்பினர்கள்
- செயற்பாடுகளை ஏற்பாடு செய்த, தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்.˙. வகைப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்ற நகரசபை தொழில்நுட்ப குழுக்கள்
- சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள்
- தனியார் துறையின் அமைப்புக்கள் பங்கேற்கும் வாய்ப்பு கிடைக்கின்றது.

## மக்கள் பங்கேற்பு வரவு செலவுத் திட்டத்தினை தயாரித்தல்




**அம்பலாங்கொடை நகர சபையின் நிதர்சனம்.**

நகர சபை அல்லது பிரதேசசபை வருடத்திற்கு ஒரு முறை தயாரித்து அனுமதியினைப் பெற்றுக்கொள்ளும் வரவு செலவு அறிக்கை மூலம், சம்பந்தப்பட்ட மாகாண நிர்வாக அமைப்பின் எதிர்வரும் வருடத்தில் செயற்படுத்தவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் எவை என்பதையும், அவற்றுக்கான செலவினத்தையும் தீர்மானிக்கும். மக்கள் வரவு செலவு என்பது வரவு செலவுத் திட்ட தயாரிப்பில் நேரடியாகா மக்கள் பங்கேற்பதேயாகும். அம்பலங்கொடை நகர சபை முறையாக திட்டமிடப்பட்ட வேலைத் திட்டத்தின் கீழ் 202 மில்லியன் ரூபா வரையிலான பெரும் தொகை பணத்தை செலவு செய்யும் விதத்தினை தீர்மானிக்கும் பொறுப்பை அந் நிதியின் உண்மையான உரிமையாளர்களாகிய அப் பிரதேசத்தின் பொது மக்களிடம் கையளித்தது.

- அம்பலாங்கொடை நகர சபையின் வரவு செலவுத்திட்ட தயாரிப்பு பணிகள் வரவு செலவு சமர்ப்பித்தலுக்கு 08 மாதங்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கப்பட்டது. அதன் முதல் கட்டமாக அனைத்து துறைகளிடமிருந்தும் அடிப்படைத் தகவல்கள் பெறப்பட்டு அத் தகவல்கள் எதிர்வுகூறலுக்குக உட்படுத்தப்பட்டது.
- நகர சபைக்கான ‘அபிவிருத்தி ஆலோசனை’ சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. இதன் அங்கத்தவர்களாக அப் பிரதேசவாசிகளான கல்விமான்கள் உள்ளிட்ட அனுபவம் மிக்க மக்கள் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.
- நகர சபையின் 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் மக்கள் மன்றங்கள் அமைப்பதற்காக சுவர்ஒட்டி விளம்பரங்கள் மூலம் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.
- அந்த ஒவ்வொரு பிரிவுக்குமென பிரத்தியேக (கடைந) ஆவணத்தாங்கிகள் ஆரம்பிக்கப்பட்டு அதனை செயற்படுத்துவதற்கென உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.
- ஓவ்வொரு பிரிவுக்குமென மக்கள் மன்றங்களை அமைக்கும் கூட்டங்கள் சம்பந்தப்பட்ட நகரசபை மந்திரியின் தலைமையில், ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், நகர சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பங்கேற்பிலேயே நடைபெற்றன. 2014ஆம் ஆண்டில் அந்தந்த நிர்வாகப் பிரிவுகளில் நிறைவேற்ற வேண்டிய அபிவிருத்திப் பணிகள் பற்றிய யோசனைகளை முன் வைக்கும் பொறுப்பு பொதுமக்களிடம் விடப்பட்டது.

- மக்களின் முன்மொழிவுகள் கிராம உத்தியோகத்தர் பிரதேச மட்டத்தில் பட்டியலிடப்பட்டு, அதற்கான மதிப்பீடுகளை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களாளேயே தயாரிக்கப்பட்டன.
- அவ்வாறு முன்மொழியப்பட்ட யோசனைகள் அபிவிருத்தி ஆலோசனை செயற்குழு கூட்டத்தில் முக்கியத்துவ அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு, மாதாந்த சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்திற்காக விடப்பட்டது.
- இறுதி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, வரவு செலவுத் திட்ட வேலைகளுக்காக நிதிப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டப் பின்னர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற யோசனைகளின் பட்டியலை முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டன.
- அடுத்த கட்டமாக இறுதி மதிப்பீட்டு தயாரிக்கப்பட்டது. அம்பலங்கொடை நகர சபையின் தலைவர், பங்கேற்பு வரவு செலவுத் திட்டம் பற்றிய தமது கருத்தை இவ்வாறு தெரிவித்தார். 'நகரவாசிகளுக்கு உயர்ந்த சேவையினைப் பெற்றுக் கொடுப்பதே எமது முயற்சியும் நோக்கமும் ஆகும். ஆகையால் நகர சபை பணிகளுடன் முழு மூச்சுடன் இணைந்து கொள்வது மக்களின் உரிமையாகும்"

## வரவு செலவு செயற்பாட்டினை கண்காணிக்க வேண்டியதன் அவசியம் என்ன?

வரவு செலவுத் திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர் எதிர்வு கூறப்பட்ட விதத்தில் செலவு செய்யப்பட்டிருக்கின்றதா? எதிர்பார்த்த விதத்தில் அரசுக்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கப் பெறுகின்றதா? அவ்வாறு கிடைக்காவிடின் அதற்கு என்ன காரணம்? வரவு செலவுத் திட்டத்தில் எதிர்வு கூறப்பட்டதற்கு புறம்பான சில காரணங்களுக்காகவும் செலவிடப்படுகின்றனவா? அப்படியானால் அது எதற்காக? அந்த விடயங்கள் பற்றி மக்களும் அரசாங்கமும் நன்கு அறிந்திருக்கின்றனவா? அப்படி இல்லாவிட்டால் பொது மக்கள் என்ற வகையில் நாம் என்ன செய்ய வேண்டும்?

## வலுவற்ற நிதி நிர்வாகம்

அபிவிருத்தி அடைந்து வரும் பல நாடுகளிலும் வலுவற்ற நிதி நிர்வாகம் இருந்து வருவதால் அரசிற்கு கிடைக்கும் நிதிகளையும் அரச செலவினங்களையும் உகந்த முறையில் நிர்வகிப்பது கடினமாகும். அரச திறைசேரிக்கு அல்லது நிதி அமைச்சுக்கு குறிப்பிட்ட வருடத்தின் நிதி எவ்வாறு சுழலுகின்றது எனபதனைப் பற்றி தெளிவாக புரிந்துக்கொள்ள இயலாத வேளைகளில், அரச நிறுவனங்களுக்கு வருடத்தின் முதல் மூன்ற மாதங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு கிடைக்காது போக வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு பதிலாக வருட இறுதியில் அனைத்து நிதிகளும் கிடைக்கப்பெறும்போது, அரச நிதி பயனற்ற விதத்தில் செலவாவதற்கு வாய்ப்பு இருக்கின்றது.

## நிதி மோசடி மற்றும் முறைகேடுகள்

வலுவற்ற நிதி நிர்வாகம் காணப்படுகின்ற நேரங்களில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு மக்கள் நிதியத்தை முறைகேடான விதத்தில் பயன்படுத்த வசதியாகவிடுகின்றது. குறிப்பாக அரசாங்கத்தின் திட்டமிடல்.'. கொள்வனவு செயற்பாடுகளில் காணப்படுகின்ற சீரற்ற நிலை நிதி மோசடிகளை முன்னெடுப்பதற்கு வழி வகுத்துக் கொடுக்கின்றது.

## நிதி ஒதுக்கீட்டை வேற விடயங்களுக்கு பயன்படுத்துதல்

சில சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டை பரிந்துரைக்கப்பட்டுள்ள வேலைத் திட்டத்திற்குப் பெற்றுக்கொடுக்காது வேறு வெளி வேலைகளுக்காக பெற்றுக்கொடுக்கலாம்.

## அரச வைப்பீடுகளை எதிர்பாராத வேலைகளில் செலவினங்களை ஈடு செய்வதற்காக பயன்படுத்துதல்

எதிர்பாராத மோசமான இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் வேகைளில் அரசாங்கத்தின் வைப்பு நிதியினைப் செலவுகளுக்காக பயன்படுத்தப்படும்.

## அரசாங்கத்தின் நிதி பற்றாக்குறை ஏற்படும் வேலைகளில்

சில வேலைகளில், வேலைத் திட்டங்களுக்கென ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகள் போதாது போகின்ற நிலைமைகள் ஏற்படும். இவ் விடயம் பற்றி தகுந்த புரிந்துணர்வு இருக்குமாயின், சிவில் அமைப்புக்கள் மற்றும் பிரதேசத்தின் மக்கள் அமைப்புக்கள், பிரதேச அரசியல் தலைமைகள் ஆகியவற்றுடன் இணைந்து, அரசின் வரவு செலவு செயற்பாட்டினை கண்காணிக்கும் பணியில் நாமும் பங்கேற்கலாம். அவ்வாறு உகந்த மேற்பார்வை இருக்கின்றபோது அரச உத்தியோகத்தர்களும், அரசியல் தலைமைத்துவமும் , நிதி மோசடி மற்றும் சீர்கேடுகள் ஆகியவற்றை தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்த நிர்பந்திக்கப்படுவர்.

## வரவு செலவு செயற்பாட்டினை கண்காணிக்கும் பணியில் எம்மாலும் இணைந்துகொள்ள முடியுமா?

பொதுமக்கள் என்ற வகையில் எம்மாலும் வரவு செலவு செயற்பாட்டினை கணக்காணிக்கும் பணியில் இணைத்துக்கொள்ள முடியும். சமூகக் கணக்காய்வு

மூலமே அது சாத்தியமாகின்றது. பொதுமக்கள் என்ற வகையில், வரவு செலவு கண்காணிப்பு குழுக்களின் பங்காளிகளாகவோ அல்லது உறுப்பினர்களாகவோ செயற்படுவதன் மூலம் ஊழலுக்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்துவதன் மூலமே இதை சாதிக்கலாம். தமது பிரதேசத்தின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படுகின்ற நிதிக்கான உரிய அபிவிருத்தி ஏற்படுகின்றதா என்பதை ஆராய்ந்து பார்க்கும் செயற்றிட்டத்தினையே 'சமூக கணக்காய்வு' என அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு மக்கள் பங்கேற்பினை ஏற்படுத்துவதன் மூலமும், பொதுமக்கள் அரச நிர்வாகம் மற்றம் அரச அதிகாரிகள் ஆகியவற்றுடன் சிறந்த தொடர்பினை பேணி வருவதன் மூலமும், அரச அதிகாரிகள் இரகசியமாக செயற்படுதற்கான வாய்ப்புகளையும், எல்லையற்ற அளவிற்குத் தான்தோன்றித்தனமாக செயற்படுவதையும் மாற்றிக்கொள்ள நேரிடுவதுடன் அது ஊழலுக்கான வாய்ப்புகளையும் மட்டுப்படுத்துகின்றது.

## கிழக்கு மாகாணத்தின் 'புறநெகும' வேலைத் திட்டத்தின் மக்கள் கணக்காய்வு*

ஏறாவூர்பற்று பிரதேச சபையினால் ஊருகாமம் புதுக்குடியிருப்பு வீதி அமைப்பின் போது கொன்கிறீட் கலவைக்கு ஆற்று மணலை பயன்படுத்தியது. அதாவது, கொன்கிறீட்டுக்கு உகந்த பெரும் மணலை உபயோகிக்காது, சுவர்கள் செப்பணிடுவதற்காக பயன்படுத்தும் மெல்லிய மணலையே பயன்படுத்தியது. சமூக கணக்காய்வுக் குழு, இப் பிரச்சினையினை இனங்கண்டு, திட்ட மதிப்பீட்டுக் குழுவிற்கு அறிவித்தது. உடனடியாக செயற்பட்ட அக்குழு வேலைத் தளத்திற்கு விரைந்து, நிலைமையினை ஆராய்ந்து 12 லொறிகளில் ஏற்றி வரப்பட்டிருந்த ஆற்று மணலை திருப்பியனுப்பியதுடன், பதிலுக்கு கொன்கிறீட்க்கு உகந்த மணலை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது.

போரைதீவுபற்று பிரதேச சபையின் கும்பழந்தோட்டம், மாணிக்கப்பிள்ளையார் கோவில் வீதியினை அப் பகுதியின் சமூகக் கணக்காய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு, அதற்கான சமூகப் புள்ளி அட்டவணையினை (ளுழஉயைட ளஉழசந உயசன) தயாரித்தது. இவ்வாறு சமூக சேவையினை வழங்கும் நிறுவனங்கள் பற்றிய அட்டவணைகளைத் தயாரித்து அவற்றை பொது இடங்களில் காட்சிப்படுத்துவதன் மூலம், அந் நிறுவனங்களும் தமது சேவை, செயற்திறன் ஆகியவற்றை புரிந்து கொள்ளும் அதேவேளை மிகச் சிறந்த சேவையினை பெற்றுக்கொடுக்க முயற்சிக்கும்.

# வரவு செலவுடன் சம்பந்தப்பட்ட சட்ட விதிமுறைகள் பற்றிய சுற்றறிக்கை

இலங்கை அரசத்துறையின் கணக்கு வழிகாட்டி,
இவ்விடயம் தொடர்பில் அரச தொழில்துறைகள் பணிப்பாளர் நாயகத்தின் 3∴2013ஆம் இலக்கத்தில் 2031.10.02ஆம் திகதி வெளியான சுற்றறிக்கை மீது உங்கள் கவனத்தை செலுத்த விரும்புகிறேன். அதற்கு அமைய நடைமுறைக்கான 10 வழிகாட்டிகளை அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டுள்ளது.

01. இ அ து க வ 1 நிதி அறிக்கையினை வெளியிடுதல்
02. இ அ து க வ 2 நிதி மூல வெளியீடு
03. இ அ து க வ 3 கணக்கீட்டு கொள்கை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றங்கள் மற்றும் தவறுகள்.
04. இ அ து க வ 4 கடன் கணக்கு செலவினம்
05. இ அ து க வ 5 வெளிநாட்டு நாணய விகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்
06. இ அ து க வ 6 அறிக்கையிடும் தினத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கம்
07. இ அ து க வ 7 சொத்து பெறுமதி மற்றும் உபகரணங்கள்
08. இ அ து க வ 8 நிதி ஒதுக்கீடு, நிச்சயமற்ற செலவுடு - நிச்சயமற்ற வரவு
09. இ அ து க வ 9 மொத்தம்
10. இ அ து க வ 10 பெறுமதி பரிமாற்றத்தின் போது எழுகின்ற வரி

2. சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள உயர்ந்த பழக்கங்களுக்கு அமைய, மாகாண நிர்வாக அமைப்புக்களினதும், மாகாண சபைகளினதும் நிதி பகுப்பாய்வினைத் திட்டமிடல் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றை மேம்படுத்துவதனை எளிதாக்கும் தரம்மிக்க நிதி கணக்கு வைப்பு மற்றும் அறிக்கையிடலுக்கான கட்டமைப்பு ஒன்று இக் கணக்குத் தரம் மூலம் ஏற்படுத்தப்படுகின்றது.

3. ஏற்கனவே தகுந்த முறைப்படி கணக்கு வைப்பதால் அனைத்து மாகாண நிர்வாக அமைப்புகளுக்கும் இக் கணக்கு வைப்பு வழிகாட்டி பொருந்துகின்றது. தகுந்த கணக்கு வைப்பு முறைப்படி கணக்கு வைப்பை ஆரம்பித்ததன்பின், மாகாண சபைகளும் இக் கணக்கு வைப்பு முறையினை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

4. அனைத்து மாகாண சபைகளிலும் இக் கணக்கு வைப்பு முறையினை செயற்படுத்துவதை எளிதாக்கும் வகையில் அது பற்றிய அறிவை பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு இலங்கை கணக்காளர் நிறுவனத்தின், அரச பிரிவாகிய அரசாங்க நிதி கணக்காளர் சங்கம் திட்டம் வகுத்துள்ளது.

5. அனைத்து கணக்காளர்கள், நிதி அறிக்கை தயாரிப்பாளர்கள், வெளியீட்டாளர்ள் ஆகியோரை இவ் அறிவூட்டல் கற்கை நெறியில் பங்குகொள்ள வைத்து இதன் உயர்ந்த பயனை அடைவதற்கு வழி செய்வீர்களாயின் அதனை மிகவும் பாராட்டுகின்றேன்.

ஆர்.ஏ.ஏ.கே.ரணவக
செயலாளர்
மாகாண சபை மற்றும் மாகாண நிர்வாக அமைச்சு
பிரதி கணக்காய்வாளர்

# அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01ஃ2012

சமூகத்தை தளமாகக்கொண்ட அமைப்புகளுக்கு நேரடி ஒப்பந்தங்களை ஒப்படைக்கும் முறை

1. சமூகத்தினை தளமாகக் கொண்ட அமைப்புகளுக்கு நேரடி ஒப்பந்தங்களை வழங்குவது பற்றி வெளியிடப்பட்டிருக்கும் அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 452 இல் வரும் ஆலோசனைகளுடன் தொடர்புப்பட்டது.

2. சமூக தள அமைப்புகளுக்கு அரசாங்கத்தின் ஒப்பந்தங்களை கையளிப்பதற்கான தகுதியினை மதிப்பிடும் அளவுகளாக அச் சங்கம் இக்டாட் நிறுவனத்தில் பதிவு செய்திருக்க வேண்டிய அவசியமில்லை.

3. மக்கள் தள அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்தங்கள வழங்குகையில் கடைபிடிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள் மற்றும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் ஆகியன இங்கு கீழே தரப்பட்டிருக்கின்றன.

4. பாராளுமன்றத்தின் தலைவரும், பிரதேச சபை செயலாளரும் பெயர் குறிப்பிடும் இரண்டு பிரதிநிதிகள் உள்ளிட்ட மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குழு ஒன்றினை இங்கே 3.2 இன் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகளை ஆராய்ந்து அவற்றை உறுதி செய்ததன் பின்னர், கீழ்வரும் சமூகத் தள அமைப்புகளிடம் நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்த வேலைகளை கையளிக்கலாம்.

ை. சமுர்த்தி படைகள் ஃசமுர்த்தி சங்கங்கள்

ைை. பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள்

ைைை. கூட்டுறவு தொழிலாளர் சங்கம் (தொழிலாளர்களின் சேவைகளுக்கு மாத்திரம்)

ைஎ. கிராம அபிவிருத்தி சங்கங்கள்

எ. பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் (அதிகார எல்லைக்கு உட்பட்ட பாடசாலை வளாகங்களில் செயற்படும்.)

எை. அனுமதிபெற்ற விவசாய அமைப்புக்கள்

எைை. கெமிதிரிய மக்கள் நிறுவனங்கள்

எைைை. அதிகாரம் மிக்க முகாமைத்துவ அதிகார சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அதிகாரம் மிக்க முகாமைத்துவ கூட்டுத்தாபனங்கள்

ைஒ. பௌத்த விஹாரைகளின் பணிகளை மேற்கொள்ளும் அமைப்புக்கள் (தத்தமது பௌத்த விஹாரைகள் தர்ம போதனா பாடசாலைகள் ஆகியவற்றில்ள இயங்கும்)

ஒ. பௌத்த விஹாரைகளின் நிர்வாக சபைகள் (குறிப்பிட்ட விஹாரை மற்றும் தர்ம போதனா பாடசாலைகளுடன் தொடர்புப்பட்ட)

ஒை. சமூக சேவைகள் அமைச்சன் கீழ் செயற்படுகின்ற தேசிய முதியோர் செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கிராமிய முதியோர் சங்கங்கள்

ஒைை. பிரதேச செயலாளர் திருப்தி கொள்ளும் திணைக்களங்களின் தலைவர்கள் இனங்கண்டு கொள்ளும் சமூக அமைப்புக்கள்

3.2 இந்த சமூக தள அமைப்புகள் பற்றி மேல் குறிப்பிட்ட குழுவினால் கீழ் கூறப்படும் ஆவணங்களை சரிபார்த்து, உண்மை தன்மையினை ஆராய்ந்ததன் பின்னர், தகுதி வாய்ந்த சமூகதள அமைப்புக்களுக்கு வேலை ஒப்பந்தங்களை கையளிக்க சிபாரிசு செய்ய முடியும்.

ை. வங்கி அறிக்கைகள் மற்றும் மேலதிக காசோலை கொடுப்பனவு வசதி ஆகியன வசதிகளுக்கு அனுமதி வழங்கும் சமுர்த்தி வங்கி, கூட்டுறவு வங்கி அல்லது கிராமிய வங்கி போன்ற நிதி நிறுவனங்கள் மூலம் வங்கி மற்றும் பண வசதி கிடைக்கப் பெறுவதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள்.

ைை. சமமான பணிகளை நிறைவேற்றிய முன் அனுபவம் பற்றிய உறுதிப்படுத்தல் சான்றுகள் அல்லது வேலைகள்.

ைைை. அவற்றின் தரம் பற்றிய திருப்தி கொள்ளத்தக்க சாட்சியங்கள்.

ைஎ. ஒரு வருடத்திற்கு முன்பாக வழங்கப்பட்டப் போதிலும், பூர்த்திச் செய்யப்படாத ஒப்பந்தங்கள் உட்பட கடந்த வருடத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்த வேலைகள் பற்றிய, குறிப்பிட்ட சங்கங்கள் வெளியிட்டிருக்கும் வெளியீடுகள் ஒப்பந்ததார்களின் பெயர், இடம், வாடிக்கையாளர், ஒப்பந்தத்தின் பெறுமதி மற்றும் அதன் தற்போதைய நிலை)

எ. குறிப்பிட்ட பணியினை உப ஒப்பந்ததாரரிடம் கையளிப்பதில்லை என்ற அறிக்கையினை வெளியிட்டிருக்கும் போதே, உப ஒப்பந்தப் பணிகளில் ஈடுபடுமாயின் அவ்வாறான சங்கங்கள் ஃ அமைப்புக்கள் ஆகியவற்றை சிறப்பற்ற பட்டியலில் பதிய வேண்டும்.

3.3 ஒப்பந்தம் கையளிக்கப்படும் போது, குறிப்பிட்ட சமூக தள அமைப்பு மூன்று ஒப்பந்தங்களுக்கு கூடுதலான ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருத்தல் கூடாது. ஆயினும் ஒரு பிரதேச செயலகப் பிரிவினை உள்வாங்கும் வகையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் ஒரு சமூக தள அமைப்பின் அதிகார எல்லை முழு பிரதேச செயலகப் பிரிவையும் கொண்டிருக்குமாயின். ஆந்த எல்லைப் பிரசேத்தில் பல்வேறு பிரிவுகளில் பல ஒப்பந்த வேலைகளை நிறைவேற்றக்கூடிய நிதி, மனிதவள மற்றும் வியாபார ஆற்றல் இருப்பதாக தனிப்பட்ட ரீதியில் திருப்தி அடையும் போது, பிரதேச யெசலாளர் மற்றும் மாவட்ட செயலாளரின் அனுமதியுடன். குறிப்பிட்ட சமூகதள அமைப்பிடம் மூன்று ஒப்பந்தங்களுக்கு மேலான ஒப்பந்தங்களை பெற்றுக்கொடுக்கலாம்.

3.4 கையளிக்கப்படுகின்ற ஒப்பந்தம் சமூக தள அமைப்பின் அதிகார எல்லைப் பிரதேசத்திற்குள் இருத்தல் வேண்டும்.

3.5 திணைக்களத் தலைவர், குறிப்பிட்ட மாவட்ட செயலாளர் அல்லது பிரதேச செயலாளர், இவ் சமூக தள அமைப்பினால் முன்னெடுக்கப்படுகின்ற குத்தகை வேலை தகுந்த தரத்தினை கொண்டதாக இருக்கின்றதா என்பதையும், தேவையான தொழில்நுட்ப கண்காணிப்புக்களை மேற்கொள்ளப்படுவதையும் பொறுப்பேற்றல் வேண்டும்.

3.6. முன்னெடுக்கப்படுகின்ற வேலைத் திட்டம், அதனை முன்னெடுக்கும் சமூக தள அமைப்பின் பெயர், அத் திட்டத்திற்கான அரச செலவினம், குறிப்பிட்ட ஒப்பந்தத்தினை சமூக தள அமைப்பிடம் பெற்றுக்கொடுத்த நிறுவனத்தின் பெயர், பயனடைவோரின் எண்ணிக்கை, ஆகிய விபரங்களைக் கொண்ட விளம்பரப் பதாகை ஒன்றிணை பொது மக்களின் பார்வைக்காக வைத்தல் வேண்டும்.

4. இதனோடு சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டி 3.9.1 க்கு அமைய வெளியிட்டிருக்கும் மேலதிக மற்றும் அரசாங்க நிதி சுற்றறிக்கை இலக்கம் 452 இரத்துச் செய்யப்படுவதுடன், அதற்குப் பதிலாக இச் சுற்றறிக்கையினை மாத்திரம் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
பீ.பி.ஜயசுந்தர
திறைசேரி செயலாளர்.

# வரவு செலவும் குடிமகனும்

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீ லங்கா**

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்கா அமைப்பானது ஊழலை ஒழிப்பதை நோக்காகக்கொண்டு உலகளாவிய ரீதியில் செயற்படும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் அமைப்பின் இங்கை அங்கத்துவ அமைப்பாகும்.**

**உலகெங்கும் நூறு நாடுகளுக்கும் மேலாக பரந்திருக்கும் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நேஷனல் நிறுவனம் அதன் வெளிபடைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லாட்சி ஆகிய கொள்கைகளை ஊக்குவிக்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.**

**பிரதேச ஆட்சியில் வெளிப்படைத் தன்மை, பொறுப்பு கூறல் ஆகிய செற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான வேலைத் திட்டம்.**

**பிரதேச நிர்வாக நிறுவனங்களுக்கும் அதன் சேவையினைப் பெரும் பொது மக்களுக்கும் இடையே நிலவுகின்ற இடைவெளியை குறைத்து, மக்களை நிர்வாகத்தின் பங்குதாரிகளாக்குவதையும், பிரதேச ஆட்சியில் மக்கள் பங்கேற்றலை அதிகரிப்பதையும் பிரதேச சபைகள், நகர சபைகள் ஆகியவற்றில் ஜனநாயக குணாம்சங்களை உள்வாங்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு, இந் நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.**

முதல் பதிப்பு - 2014
ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீலங்கா
இலக்கம் 183/5 ஹைலெவல் ரோட், கொழும்பு
தொலைபேசி: (94) 114369781
தொலைநகல்: (94)1125114588
இணையத்தள முகவரி - **www.tisrilanka.org**

ISBN: 978 - 955 - 1281 - 68 - 7